1140

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

THE REGISTRAR 28 MAY 1930

Vol 3.] 1930 ௵ பிப்ரவரி ௴ ௬ [No. 6.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 101
2. அப்பர் (வீணையும் யாழும்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 103
3. மானத சாத்திரம் (நடத்தை)
T. P மீனாக்ஷிசுந்தரம் M.A., B.L. 105
4. சூரத்துநகரிலுள்ள காப்பிக்கடை (Tolstoy)
K. இராஜகோபாலன் 107
5. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (புறச்சான்றுகள்)
E. N. பத்மாவதி அம்மாள் B. A. 109
6. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 110
7. நம்மாழ்வார் வைபவம் (கம்பரும் ஆழ்வாரும்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 113
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 114
9. இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் வருகை)
T. S. நடராஜபிள்ளை. B. A., B. L. 115
10. வர்த்தமானம் 119

கலா நிலயம்

சுயநலச் சோதனை.

1

தன்னுடைய ஆசை நிறைவடைய வேண்டுமென்ற நோக்கத்தால் கதுவப்பெற்ற செயலின்தலை நிற்குமொருவனைச் சுயநயக் கயவன் என்ற பெயரால் வைகின்றனர் மாந்தர். இவ்வகை வைவாரனைவரும் எல்லாப் பற்றுமற்ற தூய்மையிற் சிறந்தவரென்பதற் கில்லையாயினும், உரையளவிலேனும் சுயநயம் என்ப தன்பொருள் அவர் அறிந்திருக்கின்றாரென் றெண்ண இயலுமோவென ஐயுறுகின்றோம்.

பொய் சொல்வதால் ஒருவன் கெடுகின்றான் என்று புகல்வதெல்லாம் பொய்யே. அப்படியே, கள்ளருந்தியுங் கெடுவா னில்லை; குதிரைப் பந்தையங்களிற் சூதாடிச் சிலர் கெடுகின்றனர் என்பதும் மெய்யன்று. வேசையர் உறவால் மக்கள் கெடுகின்றார் எனஎண்ணுவதும் உறுபொரு ளாராயுமட்டுமே உண்மைபோல் தோன்றும். இவையெலாம் முறைபுரண்ட மொழிகள். காரணகாரியத் தொடர்பில் கலங்காக் கண்களுடையோர்க்கு இது தலைகீழ்ப்பாடம் என்பது தெள்ளிதின் புலப்படும். கள் கவறு காமமாதி தீமைகளால் ஒருவன் கெடுகின்றான் என்னல் அமையாது,—கெட்டிருத்தலால் அவன் கள்ளையும் கவறையும் வேசியையும் நாடியடைகின்றான். எனின், இத்தகைய தீமைகளை அடக்கவேண்டு மென்ற நோக்கத்துடன் இயற்றப்பெறுகின்ற சட்டங்கள், அத்தீமைகளை நிகழ்த்தும் நிலைக்களன்களை அடைப்பனபோல் விவகரிப்பினும், அவற்றின் பெயரையும் இடத்தையும் கருவிகளையும் மாற்றுவதல்லால் வேறொன்றுஞ் செய்வதில்லை. செய்வதற்கு இயலவும் இயலாது. அவனைக் கெட்டவனாகச் செய்தது எதுவென்று தேர்ந்து விலக்க இயலுமாயினன்றோ தீமைகள் நிகழாதொழியும். கெட்டவனொருவனும் சட்டத்தால் செம்மையுற்றானென்பது இவ்வுலகி லிதுகாறும் கண்டாரெவரேனு முளரோ! கள்ளுக் கடைபோல் கூட்டம் நிறைந்தது கோர்ட்டும் கச்சேரியும். சட்டை சபைகளின் ஆரவாரத்திற்கும் குறைவில்லை. சிறைச்சாலைகள் மேன்மேலும் வளர்ந்துகொண்டு வருகின்றன. வருட முழுவதும் பழுத்துத் தொங்கும் மரங்கள் தூக்குமரங்களே. எனினும் குற்றங்களின் வகையுந் தொகையும் பெருகிக்கொண் டிருப்பதையே இன்று கண்டு வருகின்றோம். ஏனெனில், இவைகளெல்லாம் தீமையைத் தடுக்கவும் தண்டிக்கவும் அமைந்திருக்கின்றனவேயன்றி, அவைகளுக்குக் காரணமாயிருக்கின்ற மூலக் கெடுதியை விலக்குதற் கேற்றவைக ளல்லவே.

ஒரு காரணத்தால் ஒரு காரியம் முடிந்ததென்று எளிதில் நினைப்பதும் பேசுவதும் சாதாரண அறிவிற்கு (Common sense) எளியதாய்த் தோன்றினும், மெய்யறிய முயலும் தத்துவ அறிவுகொண்டு ஆராயப் புகுங்கால் இதனைத் தேர்தலி னருமை தெரியவரும். காரணகாரியத் தொடரில் இடைநிழந்த இரண்டொன்றே சாதாரண அறிவிற்குத் தென்படுகின்றது. இன்னதற்கு இது காரணம் என்று எண்ணியதோடு நிறுத்திவிடுவோமானால் இம்முடிவுகொண்டு விவகரிக்கின்ற கருமங்கள் பெரும்பாலும் நினைத்ததொன்றும் எய்தியதொன்றுமாய்ப் பிழைக்கும். நாம் காரணம் என்று மதித்தது ஆழ்ந்து, நோக்குங்கால் வேறொன்

றின் காரியமாயிருக்கலாம். அவ்விதமே, காரியம் எனக் கருதப்படுவன பலமேலொரு காரியத்திற்குக் காரணமாயமையும். எனின், காரணகாரியத் தொடரில் ஒவ்வொன்றும் முறையே முன்னதன் காரியமாகவும் பின்னதற்குக் காரணமாகவும் நிற்கக்காண்போம். ஆய்பவர் அறிவிற்கு ஏற்றபடி இத்தொடரின் முன்னும் பின்னும் வளர்ந்துதோன்றும். எவ்வளவு அறிவும்ஆராய்ச்சியும்உடையோர்க்கும், இதற்குமுன் காரணம் தெரியவில்லை, இதற்குப் பின் காரியமும் தெரியவில்லை என்ற நிலை ஏற்படாது தீர்வதில்லை. இவ்விரண்டு எல்லைகளுக்கும் இடைநிகழும் தொடரின் நீளம் அவரவர் புத்தியையும் பயிர்ச்சியையும் முயற்சியையும் பொருந்தியது. அவரவர் தாம்தாம் கண்டவண்ணம் ஒன்றை மூலகாரணம் என்றும் மற்றதை முடிவுக்காரியம் என்றும் அழைப்பர். இன்னுஞ் சிறிது உற்று நோக்கினால் முன் மூலகாரணமாயிருந்தது வேறொன்றின் காரியமாவதும், முடிவுக்காரியமாயிருந்தது மற்றொன்றிற்கு முன்காரணமாவதும் புலப்படும். ஒருவன் இறந்தானென்னின் அவ்விறப்பு முடிவுக்காரியமாய்க் கருதப்படுகின்றது. இறந்ததற்குக் காரணம் என்ன? நோய். பெரும்பாலும் இத்தொடர் இவ்விரண்டோடு நின்றுவிடலாம். எனினும் மரணத்திற்குக் காரணமாயிருந்த நோய்க்கு என்ன காரணம் என்று வினவலாமன்றோ! அவ்வாறு வினவுங்கால், மிதமின்றிப்புசித்தல் அந்நோய்க்குக் காரணமாயிற்றென்று ஏற்படலாம். எனவே, இங்கு 'நோய்', மிதமிஞ்சிப் புசித்ததன் காரியமாகவும், மரணத்திற்குக் காரணமாகவும் ஒருங்கே நிற்கக் காண்கின்றோம். இப்பொழுது, மீதூண் நோய் மரணம் என்னும் இம்மூன்றினால் இத்தொடர் முடிந்ததென்று எண்ணுவார் சிலர். ஆயின், இவன் மிதமின்றிப் புசித்ததற்குக் காரணம் உளதோ, உளதாயின் அதுயாது, என ஆராய்வதும் நேரிதே. ஆராயுங்கால் 'யாம் அறியோம்' எனக் கையறநேரின் நேரலாமேயன்றி அதற்குக் காரணம் இல்லை என்று எவரும் இயம்பத் துணியார். மற்று அவன் அளவின்றி உண்டதற்குக் காரணம் ஆசைதான் என்று கருதினும் அமையும். ஆயின், ஆசை- மீதூண்-நோய்- மரணம், என்று இப்பொழுது அத்தொடர்நடக்கின்றது. இனி, ஆசைக்குங் காரணம் ஒன்று இருந்திருத்தல் வேண்டுமே என்னும் சந்தேகம் தோன்றுமெனின், தெளிந்த பொருள் அவ்வாசைக்குங் காரணமாகும். இனி மரணத்தைப்பற்றிப் பார்ப்போம். அதுவே முடிவுக்காரியமாகக் கருதப்பட்டது. ஆயினும், மரணமேதான் முடிவோ, அல்லது அதுவும் அதன்மேல் உள்ள ஒரு காரியத்திற்குக் காரணந்தானோ என்று கேட்பதும் இயல்பே. மரணத்தினால், இறந்தவனுக்கு யாதாகின்றதென ஆராயப்புகுவார் பலவேறு விதங்களிற் பேசுவார். அது யாவதாயினும், மரணமே முற்ற முடிந்த முடிவென்று கொள்ளல் இன்றியமையாத தொன்று அன்று என்பதை நினைவிற்கொள்வது இச்சமயம் போதும். இப்படியே ஏன் ஏன், என்ன என்ன, என்று ஒவ்வொரு காரணகாரியத் தொடரையும் பின்னும் முன்னும் வினவிக்கொண்டு வெகுதூரம்போகலாம் எனினும் அதற்கு இருமுனையிலும் எல்லை என்பது ஒன்று உளது. அந்த எல்லைகளைச் சாதாரண அறிவே துணையாக எய்துதல் அருமையாதலால், தத்துவத் துறைகளாய்ந்தும் தெய்விக உணர்வினாலும் சில பெரியோர் கண்டுள்ள பொருள்களைப் போற்றிப் பின்பற்றுவதனிலும் உறுதி தரத்தக்கது வேறு யாதுளது? இன்ன மேன்மையோர் முடிவுகளைக் கட்டளைக்கல்லாக வைத்துச் சோதனை செய்வோமெனின் சுயநலம் என்பதன் உண்மைநிலை ஒருவாறு புலப்படும். ஒவ்வொருவரும் இதனை நன்கு உணரவேண்டியது வாழ்க்கைக்கு உண்ணும் நீரினும் உணவினும் இன்றியமையாததாம்.

உலகத்தின்கண் நிகழ்கின்ற ஒவ்வொன்றிற்கும் முதற்காரணம் என்னும் முதல்எல்லையும், முற்றிய முடிவு என்ற மற்றஎல்லையும் உளவென்று கூறினோம். எனினும், காரணமும் காரியமும் ஒன்றில் துவக்கி ஒன்றில் முடிகின்றதென்பதில்லாமல் வரையறையற்ற வரிசையாய்த்தான் இருக்கலாகாதோவென்று சிலர் ஐயுறவு எய்தலாம். இவ்வையம் ஒருவாறு தெளிவடைதற்குக் கணித சாஸ்திரத்திலிருந்து ஓர் உதாரணம் எடுத்துக் கூறலாம் கணிதசாஸ்திர விதிகள் எல்லாம் ஒன்றற்கொன்று தர்க்கமுறை பிறழாத தொடர்புடையன வென்பதை யாவரும் அறிவார். ஒவ்வோர் விதியின் உண்மைக்கும் முன் ஓர் விதி ஆதாரமாயிருக்கின்றது. இப்படி ஒன்றன்பின் ஒன்றாய்ப்பார்த்துக்கொண்டே வந்தால் இறுதியில்இதன் பின் இன்னொன்று இருப்பதற்கியலாது என்று துணியவேண்டிய நிலையில் நிற்கவேண்டி நேரும். ஜியாமட்ரி (Geometry) என்ற கணிதநூல் பிரிவில் இதனை ஆக்ஸியம் (Axiom) என்பர். ஆக்ஸியம் என்பதைத் தமிழில் "தானே தனக்கு ஆதாரமான விதி" என்று ஒருவாறு மொழிபெயர்க்கலாம். இத்தகைய விதிகளில், "ஒருபொருளின் முழுமை அதன் ஒரு பாகத்தைவிட எப்பொழுதும் பெரியதாகவே இருக்கும்' என்பது ஒன்று. இவ்விதியின் பொருளை உணர்வது வெகுசுலபம். முழுச்சுரைக்காய், முக்கால் அரை, கால், அரைக்கால் சுரைக்காயைவிடப் பெரியதென்று விளம்பவும்வேண்டுமோ என்ன வியப்போம். "இரண்டு வெவ்வேறு பொருள்கள் மூன்றாவதான மற்றொரு பொருளுக்குத் தனித்தனிச் சமமாக இருக்குமானால், அவ்விரண்டு பொருள்களும் ஒன்றற்கொன்று சமமானவை" என்பது கணிதநூலின் தானே தனக்கு ஆதாரமாய விதிகளில் மற்றொன்று. இதன் உண்மையையுப் சாதிப்பதற்குச் சொல்வதன் மேல் வேறொன்றும் வேண்டியதில்லையே எனினும் இத்தகைய மூல விதிகளைக்கொண்டே கணித சாஸ்திரத்தின் விரிவும் நுணுக்கமும் கைவரப்பெற்றிருக்கின்றோம். மற்று, முழுமை ஏன் ஒருபாகத்தைவிடப் பெரியதாயிருக்கின்றது; அல்லது இரண்டு பொருள்கள் வேறொன்றிற்குத் தனித்தனிச் சமமாயின் தாமும் ஒன்றற்கொன்று சமமாகவேண்டுவது ஏன், என்று வினவினால் அதற்கு உத்திரம் இல்லை.

கணிதசாஸ்திரத்தில்கண்ட இவ்விதிகளைப்போலவே மற்ற சாஸ்திரங்களிலும் தாமே தமக்கு ஆதாரமாய விதிகள் இருக்கின்றன. காரணம் இன்றிக் காரியம் நிகழாது, என்பது தர்க்க விதிகளில் இத்தகைய தொன்று. இதனையே மறித்து, காரணம் இல்லாமல் ஏன் காரியம் நிகழக்கூடாது என்றுகேட்டால் விடைதரற்கு வகையுளாதா?

சுயநயச் சோதனையில் புகுவோர் இவைகளை உணர்ந்திருக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

MAY 1930

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

[85-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) வீணைவாசிக்கு மரபு.

மூன்கூறிய எண்வகை உப கலைகள் அல்லது கலைத் தொழில்களின் முறையும் இலக்கணமும் சற்று நோக்குவோம்:—

பண்ணல்

"வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டும்..............
இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது
விளைப்பரு மரபிற் பண்ண லாகும்"

திருஞானசம்பந்தர் இதை உருவகப்படுத்துவதைக் காண்க:—

"பண்ண லம்பட வண்டறை கொன்றையின்
தண்ண லங்கலு கந்தத லைவனூர்
சுண்ண லங்கவ ருங்கழிப் பாலையுள்
அண்ண லெங்கட வுள்ளவ னல்லனே"

திருக்கழிப்பாலை-பண்-கௌசிகம்-4

பரிவட்டனை

பரிவிட் டணையி னிலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவிற் றாகி
வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ
இடக்கை விரலி னியைவ தாகத்
தொடையொடு தோன்றியுந் தோன்றா தாகியு
நடையொடு தோன்று நயத்த தாகும்.

ஆராய்தல்

ஆராய்த லென்ப தமைவரக் கிளப்பிற்
குரன்முத லாக வீணைவழி கேட்டும்
இணையி லாவழிப் பயனொடு கேட்டுந்
தாரமு முழையும் தம்மிற் கேட்டுங்
குரலும் விளியுந் தம்மிற் கேட்டுந்
துத்தமும் விளரியுந் துன்றக் கேட்டும்
விளரி கைக்கிளை விதியுளி கேட்டுந்
தளரா தாகிய தன்மைத் தாகும்.

தைவரல்.

தைவர லென்பது சாற்றுங் காலை
மையது சிறப்பின் மனமகிழ் வெய்தித்
தொடையொடு பட்டும் படாஅ தாகியு
நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி
யோவாச் செய்தியின் வட்டணை யொழுகிச்
சீரேற் றியன்று மியலா தாகியும்
நீர வாகு நிறைய தென்ப.

இதன் உருவகம், அப்பர் தேவாரத்திற் காணலாம்:—

சடையின் மேலுமோர் தையலைத் தைவர
வடைகி லாவர வையர வார்த்தவர்
படையி னேர்தடங் கண்ணுமை பாகனா
வடைவர் போலிடு காடா ரூரரே.

திருவாரூர்-திருக்குறுந்தொகை-2.

செலவு

செலவெனப் படுவதன் செய்கை தானே
பாலைப் பண்ணே திறமே கூடமென்
நால்வகை யிடத்து நயத்த தாகி
யியக்கமு நடையு மெய்திய வகைத்தாய்ப்
பதினோ ராடலும் பாணியு மியல்பும்
விதிநான்கு தொடர்ந்து விளங்கிச் செய்வதுவே

இதையே அப்பர் "சொல்லிய செலவு" என்றும், சிவபெருமானைப் பகலிலாகிலும் இரவிலாகிலும்நினைத்தபோது இனியனென்றும், காலமறிந்து பாடினும் பின்னர்ச் சமண விசை சோர்வே தருமென்றும் கூறுவார்:—

பல்லுரைச் சமண ரோடு
பலபல கால மெல்லாம்
சொல்லிய செலவு செய்தேன்
சேர்வனா னினைந்த போது
மல்லிகை மலருஞ் சோலைத்
திருவையா றமர்ந்த தேனை
எல்லியும் பகலு மெல்லா
நினைந்தபோ தினிய வாறே.

திருவையாறு-திருநேரிசை 7.

விளையாட்டு

"விளையாட் டென்பது விரிக்குங் காலைக்
கிளவிய வகையி னெழுவகை யெழாலு
மளவிய தகைய தாகு மென்ப".

கையூழ்

கையூ ழென்பது கருதுங் காலை
யெவ்விடத் தானு மின்பமுஞ் சுவையுஞ்
செவ்விதிற் றோன்றிச் சிலைத்துவர வின்றி
நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி
நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும்
பாற்படத் தோன்றும் பகுதித் தாகும்.

இதை அப்பரும்,

"வண்ணங்க டாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கழலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபா லியார்
சுண்ணங்க டாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே யாமாத்து ரடிக ளாரே"

திரு ஆமாத்தூர் - திருத்தாண்டகம் - 1.

என்றும், திருவையாற்றுத் திருக்குறுந்தொகைப் பதிகமொன்றில் இசைவண்ணங்களும், ஏனைய வண்ணங்களும் எவ்வெவ் விதமாகக் காட்டக்கூடுமோ அவையாவும் பாடலாயினர். இப்பதிகம் செந்தமிழ் மாணவர்க ளறியவேண்டிய நல்லிலக்கிய இயலிசைப் பகுதியாதலின், அப்பதிகத்தை முற்றும் இங்கு வரைவோம்:—

சிந்தை வண்ணத்த ராய்த்திறம் பாவனை
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த்தழல் போல்வதோ
ரந்தி வண்ணமு மாவரை யாறரே.

மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்
நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவரை யாறரே. 2

சிந்தை வண்ணமும் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்ததோர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. 3

இருளின் வண்ணமும் ஏழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
மருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவரை யாறரே. 4

இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியு
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவரை யாறரே. 5

இண்டை வண்ணமு மேழிசை வண்ணமும்
தொண்டர் வண்ணமும் சோதியின் வண்ணமும்
கண்ட வண்ணங்க ளாய்க்கனல் மாமணி
யண்ட வண்ணமு மாவரை யாறரே. 6

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் மென்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடு வண்ணமும்
சுரும்பின் வண்ணமு மாவரை யாறரே. 7

ஊழி வண்ணமும் ஒண்சுடர் வண்ணமும்
வேழ வீருரி போர்த்ததோர் வண்ணமும்
வாழித் தீயுரு வாகிய வண்ணமும்
ஆழி வண்ணமு மாவரை யாறரே. 8

செய்த வன்றிரு நீறணி வண்ணமும்
எய்த நோக்கரி தாகிய வண்ணமுங்
கைது காட்சி யரியதோர் வண்ணமும்
ஐது வண்ணமு மாவரை யாறரே. 9

எடுத்த வாளரக் கன்றிறல் வண்ணமும்
இடர்க்கள் போற்பெரி தாகிய வண்ணமுங்
கடுத்த கைநரம் பாலிசை வண்ணமு
மடுத்த வண்ணமு மாவரை யாறரே. 10

திருவையாறு-திருக்குறுந்தொகை.

குறும்போக்கு

துள்ளற் கண்ணுங் குடக்குத் துள்ளுந்
தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி
கொள்வன வெல்லாம் குறும்போக் காகும்.

இதையே அப்பர் "போக்கெட்டு" என்று வகுத்தனர் போலும். மேற்கண்ட எண்வகைக் கலைத்தொழிலுடன் இசைக்கரணங்க ளெட்டென்பர் இசைவல்லார்.

" வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருட னுருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
வெட்டு வகையி னிசைக்கரணம் "

கானல்வரி 1.

இவ்வெண்வகை யிசைக்கரணங்களுடனும் எண்வகைக் கலைத்தொழில்கள் மேற்கண்டவாறு நடத்தி முற்காலத்தில் வீணையில் பண்களமைத்துப் பாடுவது வழக்கமாம். பண்ணை, யாழிற்பாடுவதன்முன் கண்டத்தாற் பாடவேண்டும்:—

" கண்ட மல்லது நிரம்பக் காட்டக்
கருவிக் கின்பம் கொடுப்பது மது...
பொருவரு நிலத்தைப் புணர்ப்ப ததுவே "

சொல்லகத்தியம்.

எனவே கண்டம், மூவகை நெறியின் (நிலம், கலம், கண்டம்) சிறந்ததாகும் ஏனைய, நிலம் அல்லது தான மென்பது, எழுத்து, அசை, சீர் என்னும் மூன்று வகைத்தாம். கலம் என்பது இசைக்கருவி:—

" செந்திறம் புரிந்த செங்கோட் டியாழிற்
றந்திரி கரத்தொடு திவவுறத் தியாஅத்
தொற்றுறப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்தி
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி
வரன்முறை வந்த மூவகைத் தானத்துப்
பாய்கலைப் பாவை பாடற் பாணி
யாசான் றிறத்தின் "

புறஞ்சேரி யிறுத்தகாதை (சிலப்பதிகாரம்) 106-112

என்பதில் "திறம்" என்பது, பண்களின் நால்வகைச் சாதியில் ஒன்று. அவை பண், பண்ணியல், திறம், திறத்திற மென்பன. "திறத்து வழிப்படூஉந் தெள்ளிசைக் கரணம்" (சிலப்-வேனிற்காதை - 48). இதைச் சுந்தரர் மிகவும் சிறப்பித்துக்கூறினர். எவ்வாறெனின் "பெருமானே! செந்தமிழ்த்திறம் கற்றீரோ? அதனால் செங்கண் அரவை உமது கையில் ஆட்டுகின்றீரோ', என்பர். அதாவது தமிழில் திறப்பண், எத்தகைய துஷ்ட விஷஜந்துவையும் வசஞ்செய்யு மென்பது:—

செந்தமிழ்த்திறம் வல்லிரோசெங்
கணரவமுன்கையி லாடவே
வந்துநிற்குமி தென்கொலோபலி
மாற்றமாட்டோ மிடகிலோம்
பைந்தண்மாம லருந்துசோலைகள்
கந்தநாறுபைஞ் ஞீலியீர்!
அந்திவானமு மேனியோசொலு
மாரணீய விடங்கரே

சுந்தரர்—திருப்பைஞ்ஞீலி - பண் - கொல்லி - 4

தமிழிற் பண்கள் நூற்றுமூன் றென்பர் - பண்ணின் நீர்மை பதினொரு பாகுபாடென்பர். அவை யாவன முதல், முறை, முடி, நிறை, குறை, கிழமை வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை என்பனவாம்.

பண்ணியல், ஆசான் * எனப்படும். இதன் ஜாதி நால்வகை; அகச்சாதி, காந்தாரம் (இதனை அப்பர் முதல் திருமுறையிற் காணலாம்) புறச்சாதி சிகண்டி, அருகுசாதி, தசாகரி, பெருகுசாதி சுத்தகாந்தார மென்பர். பண்ணையும் அதன் திறத்தையும் 'பண்ணும்,கிளையு"மென மொழியப்படும். அடியார்க்குநல்லார் பண்கள் நால்வகை யென்பர். அவையாவன, பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி யென்பனவாம். அவற்றின் திறங்களாவன-பாலைக்குப் புறம்-தேவாளி, அருகு - சீர்கோடிகம், பெருகு - நாகராகம்; குறிஞ்சிக்குப் புறம் செந்து, அருகு - மண்டிலம், பெருகு-அரி. மருதத்திற்குப் புறம் - ஆகரி, அருகு - சாயாவேளாகொல்லி, பெருகு-கின்னரம். இதனை முரலும் கின்னர மென்பர் அப்பர்.

* ஆசான், அரசன் என்பதின் மரூஉ.

" முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
யிரவி நின்றெரி யாடலு நீடவா
னரலும் வாரி நன்னுரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்மவ மூகிதே "

திருநாரையூர்-திருக்குறுந்தொகை-9

செவ்வழிக்குப் புறம் - வேளாவளி, அருகு - சீராகம், பெருகு - சந்தி. இவை தேவாரத்தில் ஆங்காங்கு நேரினும் அதன் உருவங்கண் டனுபவிக்கச் சக்தியற்றிருக்கின்றோம். ஏனெனில் நமது தமிழ்நாட்டில் நால்வகை யாழும் இறந்தன. வீணையும் நரம்புக் கருவியென்பதற்கு ஏலாது; உருக்குக் கருவியென்றே இக்காலத்தில் கூறவேண்டும். மாட்டின் நரம்புகளைச் சுத்தம் செய்வித்து அதனால் சுருதி முதலியன கூட்டத்தக்க இசைக்கருவிகள் இன்னும் நாகரீக மற்றதென நாம் கொள்ளும் நாட்டுப்புறங்களிற் காண்பினும், வீணை அத்தகை நரம்புகளின்றி, பித்தளையும் எழுகும் கொண்டு செய்யப்பட்ட கம்பிகளாலாக்கப் படுவதலால், யாவும் காலத்திற் கேற்ற கோலமாயிருக்கின்றன. யாழ் மறைந்ததும் பண்களும் உருவுகாட்டாது மறைந்தன. பின்வரும் இக்கேட்டை முன்னரே யறிந்த சம்பந்தர்,

'பண்ணில் யாழினர் பயிலு மொந்தையர் பட்டினத்
[துறை பல்லவ னீச்சரத்
தண்ணலா யிருப்பா ரிவர் தன்மை யாரறிவார்"

என்றார் போலும். இனியாகிலும் இசைப்புலவர்கள் தேவாரத் திருமுறைகளிலும் மற்றுமுள்ள இலக்கியங்களிலும் குறித்த பண்களினிலக்கண மாராய்ந்து வெளியிடின் நமது தமிழ்நாட்டிற்குப் பேருதவியாம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

நடத்தை (Behaviour)

இயற்கைச் செயலின் தொடரை (Chain instinct) இது நன்கு விளக்கவில்லையா? இதனை மடக்குத் தொடர் (Chain Reflex) என்று சொல்லுதல் ஆகாதோ? வரப்போகிற புதியநிலைக்கு இவை முன்னேற்பாடாக அமைந்து கிடத்தலின் இவையனைத்தும் நடத்தையேயாம். அன்றியும் இவ்விட்டிலின் செயல்கள் மடக்குச் செயல்கள்போல, ஒவ்வோர் உறுப்பின் எதிரூன்றல்கள் (Reactions) அல்ல. உயிருளி முழுதுமே எதிரூன்றுகின்றது எனல்வேண்டும். மடக்குச் செயலோ, தூண்டத்துலங்கலாம் எதிரூன்றலாகும் (Response to a stimulus). இயற்கைச் செயலோ, காணப்படும் பொருளுக்கு எதிராக ஊன்றலாம் (Response to an object). ஒரு கறுப்புப் பூனையைச் சிறு குழவி காண்கிறது. அஃதே புலனுறுதலாம். (Sensation) அதன் வடிவினையும், நிறத்தினையும், ஒலியினையும் ஒன்றுசேர்த்துப் பூனை என நாம் உணரும்போது அஃது காணப்படு பொருளாகிறது. காண்பான் (Subject), காட்சி (Perception), காணப்படுபொருள் (Object) என்ற வேற்றுமையை உணர்க. பூனை என்று காணும்போது அதனைப் பார்த்தவுடன் நாம் புலனுணர்கின்றோம் (Perceive). பல பூனைகளின் பொதுத்தன்மையை அறிந்தபோது புலனறிகின்றோம் (Conception). நான் எழுதிக் கொண்டிருக்கும் அறைக்கருகே மிளகு இடிக்கின்றனர். மிளகுத் தூள் பறந்து என் மூக்கிற் புகுகின்றது. நான் அதனை உணராது எழுதிக்கொண்டே போகின்றேன். ஆனால் மூக்கிற் புகுந்து புலனாகியபோது என்னையு மறியாமல் தும்முகின்றேன். இத்தும்மல் மடக்குச் செயலாகும். ஆனால் நாற்றத்தையும் மூக்கெரிச்சலையும் புலனுணர்ந்து, அமைதியின்றி முகங்கோணி மூக்கைச் சிந்துவேன். எனின் அது நடத்தையாகும். விலங்குகளைப் பற்றி ஆராயும்போது அவற்றின் அகநிலையை நாம் அறிய இயலாது. ஆதலின் யாதேனும் ஓர் ஒளியையோ ஒலியையோ கண்டு எதிரூன்றும்போது அது மடக்குச் செயலா, நடத்தையா என்பது தெளிவாவதில்லை. பூனையின் நிறம் வடிவு ஒலி முதலிய பலபுலன்களின் தொடர்ச்சியைக் கண்டு எலி அஞ்சி ஓடுதல் போன்றலொன்றோடொன்று இயைபுடையஎதிரூன்றல்கள் எழுமானால், நிறம் ஒலி முதலிய பலபுலன்கள் வடிவாய தூண்டல்களின்நின்றும் பூனை என்ற ஒரு காணப்படும்பொருளை உருப்படுத்தும் ஒற்றுமைக் காட்சி அல்லது ஒற்றுமைச்செயல் (Synthetic activity) அந்நிலையில் உண்டென அறிந்து அவ்வெதிரூன்றலை நடத்தை என உறுதி கூறலாம். இந்த ஒற்றுமைக் காட்சியே இந்த ஒற்றுமைச் செயலே புலனுணர்ச்சியின் (Perception) இயல்பாகும் வடிவமுமாகும். நிலப்புழு, இலையின் ஓரத்தை முற்றும் தொட்டுத்தொட்டுப் பார்த்துக் கூரிய முனையைப் பற்றி இழுக்கும்பொழுது, அங்கும் புலனுணர்ச்சியே காண்கிறோம். குருடன் குழந்தையைத் தொட்டுப் பார்த்துத் தன் குழந்தை என உணர்வது போலன்றோ உள்ளது இச்செயல். நிலப்புழுவின் செயல் வெறும் தூண்டத்துலங்கலன்று; காணப்படும் பெருளையும் உணர்ந்து, அதன்வடிவையும்உணர்ந்து, அவ்வுணர்ச்சி வழியாகச் செயல்புரிவதாகும். இவ்வுணர்ச்சியோ பல புலன்களினால் (Sensations) அடைந்ததொன்றாகும். ஒரு தூண்டல் வலிவற்றிருந்தால் நாம் துலங்குவதில்லை. சிறிய ஒலிகேட்டுத் திடுக்கிடுவதில்லை. தொடர்ந்தும் விரைந்தும், இத்தூண்டலே எழுமானால் முன் துலங்காத நாம் அப்போது துலங்குகிறோம். பல புலன்களால் ஆயது நிலப்புழுவின் உணர்ச்சி என்றபோது இத்தகைய தூண்டற்றொடர்ச்சியால் (Summation of Stimulus) எழுந்ததென்று எண்ணுதல் கூடாது. தூண்டல்கள் பலவற்றை ஒற்றுமைக்காட்சியாகக் கண்டு, புலன்களை ஒன்றுக்கொன்று இயைபுடையதொரு காணப்படுபொருளாக உருப்படுத்துவதே புலனுணர்ச்சியாகும். நமது கட்புலனும் செவிப்புலனும் இவ்வொற்றுமைக் காட்சியாலேயே சிறந்துவிளங்கி உயரிய அறிவுடைய புலன்

88வது பக்கத் தொடர்ச்சி.

கள் எனப் பெயர்பெறுகின்றன. எறும்பு முதலியவற்றிலோ ஊறும் நாற்றமும் ஆகிய புலன்கள் இவ்வாறு உயர்ந்து விளங்குகின்றன. முன் சொன்ன விட்டில், எல்லா விடத்தையும் விட்டுவிட்டு, தன்முட்டைகள் எங்கு வளருமோ அங்கு இடுகின்றதெனக் கண்டோம். பூவில் உள்ள மணமே அதனைத் தன்புறமாகத் திருப்பிக்கொள்கின்றது எனத் திருப்பக்கொள்கையினர் கூறலாம். பூவால் வலித்திழுக்கப்பட்ட அவ்விட்டில் முட்டையினைப் பூவில் எங்கேனும் இடலாம் அன்றோ? குறித்த ஓரிடத்தில் முட்டையிடுவதை அத் திருப்பக்கொள்கை விளக்க முடியுமா? புலன்களின் (Sensations) தொடர்ச்சியோ இச்செயலை உண்டாக்குகின்றது? மலரின் பலபிரிவுகளின் வடிவினையும் ஒன்றுபடுத்தி உள்ளவாறு உணர்தல் வேண்டும். மலரை ஒற்றுமைக்காட்சியாகக் காணல் வேண்டும். மலர்க்கும் அல்லித்தாளிற்கும் உள்ள தொடர்பினை உணர்தல்வேண்டும். ஆதலின் இங்கும் புலனுணர்ச்சியே காண்கின்றோம். தூண்டத்துலங்கி எதிரூன்றற்கும் புலனுணர்ச்சியால் எதிரூன்றற்கும் உள்ள இவ்வேற்றுமையை நாம் மறத்தலாகாது.

குளவிகளின் செயல்களும் இவ்வாறே விளங்குகின்றன. குளவிகள் தனியே வாழ்வன; தம்மினத்தாரின் வாழ்க்கையைக்கண்டபின், செயலுறுவன அல்ல. புழுநிலையிலிருந்து வெளிவந்தவுடன் பெண்குளவி முட்டையிடத் தொடங்குகின்றது. முட்டை இடத்தக்க இடத்தைத்தேடுகிறது. அங்கு ஒரு வளைசெய் தமைக்கின்றது. ஒவ்வோர் இனமும் ஒவ்வோர் வகையான வளையே அமைக்கக்கூடும். சிலதரையில் வளைதோண்டுகின்றன, சில கட்டுகின்றன. வளை செய்தமைத்தபின் முட்டை புழுவாய் மாறியவுடன் அது வளர்ந்துவாழ்தற்குத் தீனிவேண்டாமா? அத்தீனியையும் முன்னேற்பாடாக வளையில் இடுவதற்கு இரையை நாடி வேட்டையாடச் செல்கின்றது. ஒவ்வோர் இனமும் ஒவ்வோர் இரையையே நாடுகின்றது. ஓரினம் சிலந்தியே கொண்டு வரும்; மற்றோரினம் எரிபுழுவே (கம்பளிப்பூச்சி) கொண்டுவரும். இவ்வாறு வளையையும் இரையையும் நோக்கினல் குறுகிய அறிவுடையதாக அன்றோ விளங்குகின்றன. ஆனல் இக்குளவியிடத்தும் அறிவுவிளக்கம் காணப்படுகின்றது. தொலைவாக இரைதேடச் சென்றாலும், தவறாது தன் வளையை வந்து சேர்கிறது. இதன் உணவுதான் என்ன? எவ்வாறு தன் வளையைக் கண்டுபிடிக்கிறது. இரை நாடிப் போவதற்குமுன், தன் வளையைச் சுற்றிச்சுற்றி வட்டமிடுகின்றது. சிறகச் சிறக அவ்வட்டத்தை அகலப்படுத்திக் கொண்டே பறந்து செல்கின்றது. ஏன் இவ்வாறு பறக்கின்றது? நாம் ஓர் அடர்ந்திருண்ட காட்டில் ஒரு குடிசை கட்டி வாழ்வோமெனின் உணவு தேட வெளியேறும்போது என்ன செய்வோம்? மறுபடியும் குடிசைக்குத் திரும்பிவருவதெப்படி என்று எண்ணுவோம் அன்றோ? நம் குடிசையைச் சுற்றியுள்ள பொருள்களைக் கண்டறிவோம். அவற்றை எல்லைக்குறியாக உணர்கின்றோம். காஞ்சிமரமும், புளியமரமும் உள்ளன என்று தனித்தனியே உணர்ந்தாலும் பயனில்லை. அத்தகைய மரங்கள் பல அக்காட்டிடை இருக்கும் அன்றோ? அவற்றைக்கண்டும் மருளுவோம் அன்றோ? ஆதலின் குடிசையும் மற்றைய பொருள்களும், ஒன்றற்கொன்று தெற்காக இருக்கின்றனவா வடக்காக இருக்கின்றனவா என்று அவற்றின் நிலையினையும் அவ்வெல்லைக் குறிகளின் தனிச் சிறப்பியல்பினையும் அறிவோம். ஒன்றற் கொன்றுள்ள தொலைவினையும் அறிந்துவைப்போம். இவ்வாறு சுற்றிச்சுற்றித் திரிந்தபின்னரே வெளியேறுவோம். இவ்வாறு சுற்றியுள்ள இடத்தின் நிலையையும் பொருள்களையும் ஒற்றுமைக்காட்சியாகக் காண்பதன்றோ புலனுணர்ச்சியாவது? இவ்வாறுதான் குளவியும் தன் வளையைச் சுற்றியுள்ள பொருள்களை எல்லைக்குறிகளாகத் தொடர்ந்துணர்ந்து பின்னர் இரைதேடச் செல்கின்றது. ஆதலின் புலனுணர்ச்சி குளவிக்கும் உண்டென்பதாயிற்று. அவ்வளையருகில் எல்லைக் குறியாக விளங்குவனவற்றை, அக்குளவி சென்றவுடன் எடுத்துவிடுவோமானல் அது வளைக்குத் திரும்புவது அருமையாகிறது. ஆதலினல் அப்பொருள்களை எல்லைக்குறிகளாக வைத்தே இடவாராய்ச்சி செய்து அவ் விடநிலையை ஒற்றுமைக்காட்சியாகக் கண்டு உணர்கின்றது என்பது விளங்குகிறது. சுற்றிச்சுற்றிப் பறப்பதும் இவ்விடவாராய்ச்சி செய்யவே என்பதும் தெளிவாகிறது. இரைதேடித் திரும்புகையில்,முன் தான் செய்த இடவாராய்ச்சியைப் பயன்படுத்திக் கொள்கிறது. தன்னுடனேயே, தன்னிருப்பிடத்தின் ஓவியத்தினை உள்ளத்தே எழுதி எடுத்துச் செல்கிறது எனலாம். முன்நுகர்ச்சியைப் பின்னர்ப் பயன்படுத்திக் கொள்வதன்றோ அறிவின்சிறப்பியல்பு. அவ்வகையில் இக்குளவி அறிவுடையதாக அன்றோ விளங்குகிறது. இயற்கைச் செயலுக்கு அறிவு பணியாளாக அமர்கின்றது. அறிவினைப் பயன்படுத்தவேண்டுவதில்லை என்றால்,வேறுவகையில்இக்குளவியின் இயற்கைச்செயலை இயற்கையன்னை மாற்றி யமைத்திருப்பாள். வளைதோண்டியபின் இரைதேடச் சென்று இடவாராய்ச்சியின் பயனாகத் தன்னிருப்பிடத்திற்கு மீண்டுவரும் முறையை மாற்றி, இரைதேடியபின் அவ்விரையை ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்த்து அவ்விடத்தில் வளைதோண்டுமாறு அவ் வியற்கைச்செயலை இயற்கையன்னை அமைத்திருப்பாள். உள்ளம் ஒன்று இருத்தலின் அவ்வாறு செய்யவில்லை. அறிவே துணையாக அமைத்தாள். இரை யகப்பட்டதும் அதனைக் கொணர்ந்து வளையில் வைத்தபின் அதன்மீது முட்டையிடுகின்றது. பின்னர்ப் பறந்து போய்விடுகிறது. முட்டையினின்றும் குளவி வெளிவருவதை இது காண்பதில்லை. ஆதலால் தன் செயலின் பயனை இஃது உணர்வதில்லை. பயனை அறியாமை இயற்கைச் செயலின் சிறப்பியல் எனச் சிலர் கூறுவர். ஆனல், இன்றியமையாச் சிறப்பியல்பெனக் கூறுதற்கில்லை. எனினும் இவ்வியல்பைக் கண்ட இடத்தில்எல்லாம், இயற்கைச் செயனிலை உண்டென உறுதிகூறலாம்.

கம்பராமாயணம்.

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், கே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார்—பதிப்பு

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. பாலகாண்டம் ரூ 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரண்யகாண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0 சுந்தரகாண்டம் ரூ. 5. (வி பி. செலவுவேறு) கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

டால்ஸ்டாய் எழுதிய

சூரத்து நகரிலுள்ள வோர் காப்பிக்கடை.

"A Coffee House in Surat" by Count leo Tolstoy

[93-வது பக்கத் தொடர்ச்சி.]

இவ்வண்ணம் எல்லோரும் வாதம்செய்யவும் உமார் வகுப்பைச் சேர்ந்த துருக்கியர்,தனிமையில் உட்கார்ந்திருந்த சீனதேசத்து வாலிபரை நோக்கி, 'உமது கருத்தென்ன? எங்கள் நாட்டிற்குவரும் சீனவர்த்தகர், மகமதியமதத்தைச் சீனர் விரும்பி யேற்பதாகக் கூறுகின்றனர். ஆகவெ நீரும் மகமதிய மதத்தை ஆதரித்துப் பேசுவீர். வாய்மூடி யிருத்தலாகாது' என்று கூறினர். மற்றவர்களும் 'உமது கருத்தைச் சொல்வீர்', என்றனர்.

அங்கு வாதத்தில் தலையிடாது வீற்றிருந்த சீனர் கன்பூஷியஸ் என்னும் பெரியாரின் மதத்தினர்.தனது கருத்தைப் பின்வருமாறு அமைதியுடன் அவர் கூறினர்:—

"ஐயா, எனக்கொன்று தோன்றுகின்றன. ஒருவர் பிற மதங்களினின்று மாறுபடுவதற்கெல்லாம் காரணம் வீண் அகம்பாவமே நான் ஒரு கதை சொல்வேன். அதைக் கவனத்துடன் கேளுங்கள் அதுவே உங்கள் வாதத்திற்கு விடையளிக்கும்.

நான் சீனவிலிருந்து ஒரு ஆங்கிலக்கப்பலில்இந்தியா வந்தேன். அக்கப்பல் உலகமுழுதும் சென்றுள்ளது. கப்பலில் இருந்த குடிதண்ணீர் குறைந்துவிடவே, கப்பல் சுமத்திராத் தீவிற்குச் சென்றது. நாங்கள் கப்பலினின்றுஇறங்கிச்சிறிது தூரம் சென்றுதென்னை மர நிழலில் அமர்ந்தோம். நாங்கள் தங்கிய விடம் ஒரு கிராமத்திற் கருகாமை யாகும். நாங்கள் பல நாடுகளைச் சேர்ந்தவர். மரத்தின் நிழலில் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தோம்.

"இந்தச் சமயம் குருடன்ஒருவன் நாங்கள் இருக்குமிடம் வந்தான். சூரியனிடம் என்ன விருக்கின்றதென்றும், சூரியலொளியைத் தான் கைப்பற்றவேண்டுமென்றும், அவனுக்கு ஆதியில் ஆவல் ஏற்பட, சூரியனை ஓயாது பார்த்தான் என்றும், அதனல் அவன் கண் அவிந்துபோயது என்றும் நாங்கள் அறியலானேம்.

"சூரியனை ஓயாது பார்த்துக்கொண்டிருந்ததின் பயன் அவன் கண் கெட்டது; கண் இழந்த அவன் பின் வந்த முடிவு இதுவே.

"சூரியவெளிச்சம் ஜலமன்று, ஜலமாயின் அதை ஒரு பாத்திரத்திலிருந்தும் மற்றொரு பாத்திரத்திற்கு மாற்றலாம்; காற்றுமதனில் அலையெழும்பச்செய்யும். அது நெருப்பு மன்று. நெருப்பாயின் மழையும், ஜலமும் அதை அவித்துவிடும். கண்ணல் அவ்வொளியைப் பார்க்க முடிவதால் அது ஆவி (Spirit) அன்று. சூரியனொளி ஜடபதார்த்தமுமன்று; ஏனெனில், அதை அசைக்க முடிவதில்லை.சூரியவெளிச்சம், ஜலமுமன்று நெருப்புமன்று ஆவியுமன்று, ஜடபதார்த்தமுமன்று, ஆகவே அது ஒன்று மன்று. இதுதான் அக்குருடன் முடிவு. அவன் ஓயாது சூரியனைப் பார்த்துக்கொண்டிருந்ததினல், அவன் கண்ணையும் புத்தியையும் இழந்தான். அவன் முழுக் குருட னனவுடன் சூரியனென்பது ஒன்று இல்லை என்றே முடிவும் கட்டிவிட்டான்.

"இக்குருடனுடன் அவனது அடிமையும் வந்திருந்தான். அவ்வடிமை தனது எஜமானனை ஒரு மரத்தடியில் உட்காரவைத்துவிட்டு, தென்னைமரத்திலேறி ஒரு தேங்காயைப் பறித்தான். பின், மாலை நெருங்கிவிட்டதால் விளக்கொன்றேற்ற முயன்றுனுகித் தேங்காய் மட்டையை உரித்து, அதன் நாரைக்கொண்டு திரி செய்தான். தேங்காய்ப் பருப்பைப் பிழிந்து எண்ணெ யெடுத்தான். அந்த எண்ணெயை அத்தேங்காயினது ஓட்டில் வார்த்து நார்த்திரியை அதில் போட்டு விளக்கேற்றினன்.

"இம்மாதிரி அடிமை வேலைசெய்துகொண்டிருக்கையில் குருடன்பெருமூச்சுவிட்டுத் தன் அடிமையை நோக்கி,

"'சூரியன் என்பதொன்று இல்லையென்று என்றுநான் சொல்வது சரியில்லையா? எங்கும் ஓரே யிருளா யிருக்கின்றதல்லவா? இருந்தாலும் ஜனங்கள் சூரியன் இருக்கின்றதென்று சொல்லுகின்றனர். அது இருக்குமானல், அது எங்கே, காட்டு பார்ப்போம்?' என் மொழிந்தனன்.

"அடிமையானவன், 'சூரியன் எங்கே யிருக்கின்றதென்று எனக்குத்தெரியாது. இது தெரிந்து சொல்வதும் என் வேலையன்று. ஆனல் எனக்கு விளக்கு என்றால் என்னவென்று தெரியும். தேங்காயின் உதவியால் ஒருவிளக்கு இப்பொழுதுஏற்றியுள்ளேன். இவ் விளக்கின் துணைகொண்டு உங்களது ஏவலை நான் செய்யக்கூடும்' என்று, அருகிலிருந்த தேங்காயினோட்டை எடுத்து, 'இதுதான் எனது சூரியன்' என்று கூறினன்.

"இவர்களுக்குச் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த நொண்டி யொருவன், இவ்விருவர் உரையையுங் கேட்டுச் சிரித்துச் சொல்வான்—

"ஐயா குருடரே, நீர் பிறவிக்குருடர் என நினைக்கின்றேன். இல்லையேல் சூரியனை அறிந்திருப்பீர். நான் சொல்கின்றேன் கேளும். சூரியன் பந்து போன்ற உருவமுள்ள நெருப்பு. சமுத்திரத்திலிருந்து ஒவ்வொருநாள் காலையிலும் எழுகின்றது. மாலையில் மலையிடை மறைந்து விடுகின்றது. தினம் தினம் இக்காட்சியை நாங்கள் பார்க்கின்றோம். உமக்குக்கண்ணிருப்பின் நீரும்பார்ப்பீர்".

நொண்டி கூறிய இதனைக் கேட்ட செம்படவன் ஒருவன் அந்நொண்டியைப் பார்த்து,

'உமது வார்த்தையிலிருந்து நீர் இருக்கும் தீவிற் கப்பால் போனதில்லை யென்று தெரிகின்றது. உமக்குக் கால் இருப்பின் யாத்திரை செய்திருப்பீர். மீன் பிடிக்க நான் வெகுதூரம் கடலில் பிரயாணம் செய்கிறேன். காலையில் சமுத்திரத்திலிருந்து எழுந்து மாலையிலும் சமுத்திரத்தில் சூரியன் மறைகின்றது. சூரியன் மலையில் மறைவதில்லை,நான்சொல்வது உண்மை.

நான் தினந்தோறும் சூரியன் கிளம்புவதையும் மறைவதையும் என் கண்களால் காண்கின்றேன்' என்றனன்.

"செம்படவன் நிறுத்தியதும் அங்கிருந்த இந்தியன் ஒருவன் கூறுவான்:—

'புத்தியுள்ள மனிதர் இப்படி அர்த்தமில்லா வார்த்தைகள் பேசுவது எனக்கு வியப்பைத் தருகின்றது நெருப்புத்துண்டம் தண்ணீருட் செல்வதும், மீண்டும் தண்ணீரிலிருந்து பிரகாசத்துடன் வெளிவருதலும் எவ்வாறு இயலும். நெருப்பைத் தண்ணீர் அவித்துவிடாதா? ஆகவே சூரியன் நெருப்புத்துண்டமன்று. அது ஒரு தேவதை; அத்தேவதை தனது இரதத்திலே மகாமேருவை ஒரு தரம் சுற்றுகின்றது. அவ்வளவுதான். சிலசமயம் ராகு கேது என்னும் துஷ்டக் கிரஹங்கள் சூரியனை பற்றுகின்றன. பிராமணர்கள் கடவுளைச் சோஸ்த்திரம் செய்யவே, அவை சூரியனை விட்டு அகல்கின்றன. மறுபடியும் சூரியதேவன் மேருவைச் சுற்றி வருகின்றார். உங்களைப்போன்ற அறிவிலிகள்தான் சூரியன் உங்கள் தீவிற்குமாத்திரம் பிரகாசம் தருகின்றதென்பர்.'

"எகிப்துநாட்டுக் கப்பலோட்டி ஒருவன், 'நான் பல தேசங்கள் யாத்திரை செய்துள்ளேன். சூரியன் தேவதை அன்று. அரபிக்கடலிலும் பிராயணம் பல முறை செய்துள்ளேன். மடகாஸ்கர், பிலிபைன்ஸ் போயுள்ளேன். சூரியன் உலகமெங்கும் பிரகாசிக்கின்றது. ஜப்பானுக்குக்கிழக்கேஉதிக்கின்றது, இங்கிலாந்திற்கு வெகுதூரம் மேற்கே அஸ்தமிக்கின்றது. ஆகவேதான் ஜப்பானியர் தங்கள் நாட்டை 'நிப்பன்' (Nippon, சூரியன் பிறக்குமிடம்) என்று அழைக்கின்றனர். உலகமுழுதும் யாத்திரை செய்துள்ள எனது பாட்டனாரும் அவ்வாரே கூறியுள்ளார்" என்று கூறினான்.

எகிப்தியன் முடிக்குமுன் ஆங்கில மாலுமி ஒருவன், அவசரத்துடன்:—

"சூரியனைப்பற்றியவிஷயம் ஆங்கிலேயருக்குத்தெரிவதுபோல் மற்ற நாட்டாருக்குத் தெரியாது. சூரியன் உலகமுழுதும் ஒளி தருகின்றது. சூரியன் உதிப்பதுமில்லை, மறைவதுமில்லை: பூமியைச்சுற்றிச் செல்கின்றது. நாங்கள் இப்பொழுதுதான் உலகம் முழுவதும் சுற்றி வருகின்றோம். நாங்கள் சென்றவிடமெல்லாம் சூரியன் உதிப்பதும், அஸ்தமிப்பதுமாய்த்தானிருந்தது" என்று இயம்பினான்.

"இவ்வாறு கூறிய ஆங்கிலேயன், ஒருகுச்சியை எடுத்துச் சக்கிரம்ஒன்று போட்டுச் சூரியகதியை விளக்க முயன்றான். ஆனால் இயலவில்லை. தனதுகப்பலில் உள்ள பைலட்டை அழைத்துச் சூரியகதியை விளக்குமாறு கூறினான்.

"இந்தப் பைலட்டு புத்திசாலி. இதுவரை ஒரு வார்த்தையும் சொல்லாது சும்மாவிருந்தவன், இப்பொழுது தன்னைக் கேட்டவுடன் கூறினான்—

"நீங்கள் சொல்வதில் உண்மையில்லை. தெரிந்தவர்போல் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களையே வஞ்சித்துக் கொள்கின்றீர்கள். சூரியன் பூமியைச்சுற்றிச் செல்லவில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றிச் செல்கின்றது. சூரியன் ஒரு நாட்டிற்கும் ஒரு மலைக்கும் மாத்திரம் ஒளி தருவதோடு நிற்பதில்லை. பூமி சுற்றுங்கால் சூரிய வெளிச்சம் தேசங்களின் பல பாகங்களிலும் படுகின்றது 24 மணி நேரத்தில் பூமி ஒரு முறை சூரியனைச் சுற்றிவருகின்றது. ஜப்பான், சீனா, துருக்கி, சுமாத்திரா, ஐரோப்பா, அமெரிக்கா முதலி நாடுகளிலும் வேறு பலவிடங்களிலும் சூரியப்பிரகாசம் இருந்தே வருகின்றது. நமது பூமிக்கு வெளிச்சம் தருவதுபோலவே, மற்றக் கிரகங்களுக்கும் சூரியன் வெளிச்சம் தருகின்றது. எனவே சூரியன் ஒரு வகுப்பாருக்கும் ஒருநாட்டாருக்கும் மாத்திரம் ஒளி தருவதில்லை என்பதை அறிவீர்."

தன்கதையை இவ்வாறு முடித்தனன் அச்சீனவாசி. முடித்து மேலும்மொழிவான்:—கடவுள் விஷயமாயும் இவ்வுண்மை பொருந்தும். நமதுகர்வமே, பூசலுக்கும் குழப்பத்திற்கும் காரணம். சூரியனைப்பற்றி ஒவ்வொருவரும் என்ன கூறினரோ, அதேபோல் கடவுளையும் பற்றிக் கூறினர். ஒவ்வொருவனும் தனக்கும் தன் நாட்டிற்கும் தனிக்கடவுளைச் சமைத்துக்கொள்ள விரும்புகின்றான். ஒவ்வொருவனும் தன் நாட்டையே கடவுளின் கோயிலாகக் கொள்கின்றான். யாரை? உலகத்தாலும் கட்டுப்படுத்த முடியாத எல்லாம் வல்லராய் எங்கும் நிறைந்த கடவுளை!

"ஒருமதம் ஒருகடவுள், என்று மானுடஇனத்தார் கொள்ளவும், எல்லாரும் ஒருவரென்றும் மனித ஜாதியில் வேற்றுமை யில்லையென்றும், உணர்ந்து எல்லோரும்சேர்ந்துவாழக் கடவுள்கட்டுவித்த சிருஷ்டியாகிய கோயிலின்முன் மனிதன் அறியாமையினால், 'எமது கடவுள் அவர், எமதுநாடுஅவர்வைகும் கோயில்' என்று பேசும் பேச்சு ஒரு பொருளாகுமோ? ஒவ்வொரு கோயிலிற்கும் குளமும் படித்துறையும் முன்முகப்பும், மண்டபமும், விளக்கும், சித்திரப்படங்களும், சிற்பச்செல்வமும், ஆகமங்களும், பூசையும், பூசாரியும் உண்டு. எனினும் கடவுள் கட்டிய கோயிலிற்போல், சமுத்திரமும் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் மனிதனாகிய சிற்பபொக்கிஷமும் எங்குள? மனிதன் ஹிருதயத்தில் கடவுளால் எழுதிவைக்கப்பட்ட நீதிநூல்போல் தர்மம் கற்பிக்கும் நூல் ஒன்று உலகில் உண்டோ? மனிதன் அன்பின் மிகுதியால் மற்றொருவனுக்காகத் தன்நலம் துறப்பதினும் சிறந்த வழிபாடும் பூசையும் உண்டோ? நல்ல மனிதனது ஹிருதயத்தினும் சிறந்தது ஒன்றுண்டோ? அத்தகையான் ஹிருதயத்தில் இறைவன் உறைகின்றான். என்மதம் உன்மதம் என்ற வழக்கில் கடவுள் இல்லை. இவ்வழக்கற்ற பெரிய கொள்கையுடையாரே அவனது அனுபவம் பெறுவர். அவ்வனுபவம் பெறப்பெற மனிதன் அவனை நெருங்கி நெருங்கிச் செல்கின்றான். கடவுள்தன்மையதான நன்மை, அன்பு, கருணை இவற்றைப் பெறுகின்றான். அவனே மனிதன்.

"உலகமெங்கும் கதிர்வீசும் சூரியனது தன்மை அறிந்தவர், தன்நாட்டுக் கடவுளின் சிறு ஒளியையே பார்க்கவல்ல சிற்றறிவுடையவனைப் பழிக்கவேண்டா. சூரியனே இல்லையென்று கூறிய நம்பிக்கையற்ற குருடனையும் தூஷிக்கவேண்டா".

இன்னபடி சீனதேசத்தான் உண்மையை விளக்கவே அங்கிருந்த எல்லோரும் மேலும் வழக்கிடாதொழிந்தனர்.

முற்றிற்று.

அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

vii சில அடியார் சம்பந்தமான புறச்சான்றுகள்.

89-வது பக்கத் தொடர்ச்சி

மூர்த்திநாயனார் காலம் சமணர்காலமென்று ஏற்படுகின்றது. அக்காலத்தில் வடுகமன்னன் கர்னாடகதேசத்திலிருந்து படையெடுத்து மதுராபுரியைக் கைப்பற்றி அரசாண்டானென்பதும் தெரியவருகின்றது. இவ் வடுகமன்னன் சமணமதத்தை மேற்கொண்டு சைவநெறிக்குத் துன்பம் விளைவித்தவனாகவும் காணப்படுகின்றான். இத்தகைய வடுகர் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரத்தில் மொழியப்பட்டிருக்கின்றனர். * இவ் வடுகர்களே கலியரென்று முன்னே காணப்பட்டவர்களென்று அநுமானிக்கலாம். அக்காலத்தில் பாண்டியநாடே வடுகர் கைவசமாயிற்றென்றால் ஏனைய தமிழ்நாட்டின் கதி என்னவோ! அக்காலத்தில் ஜனங்கள் தங்கள் சொத்துக்களைக் கிணறு முதலிய இடங்களில் மறைத்தனர். மதுரை மில்லில் (Mills) சில வருடங்களுக்குமுன் கண்டெடுத்த (Gold coins embosssd with the figure and name of Imperatur Julius Caesar) பொன்னாணயங்கள் † இக்காலத்தில்போடப்பட்டன. ரோமாபுரி அரசாண்ட ஜூலியஸ் சீசர் (Julius Caesar) கி. மு. முதல்நூற்றாண்டில் இருந்தவரென்று நாம் அறிகின்றோம். ஆதலால் அக்காலத்து வியாபாரத்தால் வந்த பொன்னாணயம், மூர்த்திநாயனார்காலத்தில் வடுகர் குழப்பத்தில் ஒரு கிணற்றில் எறியப்பட்டதென்று நாம் அநுமானிக்கலாம்.

2. சமணக்குழப்பமும் அதன் காலமும்

இது அப்பர் சம்பந்தர் காலம். அவர் காலத்தியவர் முருகனார், பாண்டிமாதேவி, சுந்தர பாண்டியன், அவர் மந்திரியான குலச்சிறையார் முதலானோர். இவர்கள் க்ஷத்திரிய வம்சத்தார். பிராமணத் திருமேனிகள் அப்பூதிநாயனார், முருகனார், திருநீலநக்கர் முதலானோர். குலச்சிறப்புப்பெறாது குணச்சிறப்பு பெற்றவர் திருநீலகண்டத்து யாழ்ப்பாணர். சற்றேறக்குறைய பத்து, பன்னிரண்டு, நாயன்மார்களை இக்கால வரையறையில் அடக்கிக் காட்டலாகும். ஆகையால் அப்பர் சம்பந்தர் காலநிர்ணயம் எத்தகைய அகச்சான்றுகளால் வற்புறுத்தக் கூடுமென்பது சற்று ஆராய்வோம்.

பௌத்தமும் சமணமும் தென்னிந்தியாவில் அழிந்தகாலம் சம்பந்தர் காலமாகும். இதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்ச் சங்கராச்சாரியார் பௌத்த முதலிய மதங்களை வேரறக் களைந்தார். சீனதேசத்து யாத்திரைக்காரர்களான, Fa Hian, Huien Tsang என்னும் இவர்கள் முறையே இந்தியாவுக்கு வந்தபோது பௌத்தமத நிலைமையைப்பற்றி அவர்கள் யாத்திரை வரலாறுகளில் மொழிந்திருக்கின்றார்கள். சம்பந்தர் காலம் சற்றேறக்குறைய FaHian காலமென்றே கொள்ளல் வேண்டும். சிறுத்தொண்டநாயனார் வாதாவியில் வெற்றிபெற்று அவ்வெற்றியைக்குறித்துள்ள சிலாசாசனத்தின் கணக்கெடுப்போமாயின், சுமார் மூன்று நூற்றாண்டுக்குச் சம்பந்தர் காலம் பின்னாகும். ஆயின் அக்காலம் சமணம் பௌத்தம் பேரற்று ஒழிந்த காலமாம் இதுநிற்க இலங்கைதேசத்துச் சரித்திரத்தை ஆராய்ந்து, கஜபாகு முதலானோர் தென்னிந்தியாவின்மேல் படையெடுத்த கணக்கெடுப்போமாயின், காலநிர்ணயம் வேறுபடுகின்றது. இத்துடன் பூகோள சாஸ்திர ரீதியாய்க் காலவளவைக் கணிப்போமாயின் பேதம் அளவிடற்கு அரியதாயிருக்கின்றது. சிலப்பதிகாரக் காலத்தில் கிருத்திகை நக்ஷத்திரம் துருவஸ்தானத்தில் இருந்ததாக அந்நூலில் அகச்சான்றுகள் உள. சம்பந்தர் காலத்தில் பரணி நக்ஷத்திரம் துருவஸ்தானத்தை அடைந்திருந்ததாய் அவர் "வேயுறு தோளிபங்கன்" என்னும் பதிகத்தின் இரண்டாம் பாசுரம் விளக்குகின்றது. * இதில் 'ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டொடாறுமுடனாய நாள்கள்' என்பன, பரணியும், பரணி முதல் நக்ஷத்திரமாக வைத்துக் கணக்கெடுக்கப் பட்டவைகளுமாம். நமக்கு இப்போது துருவ ஸ்தானத்தில் இருக்கும் நக்ஷத்திரம் உத்தரட்டாதியாம். இருபத்தேழு நக்ஷத்திரங்களும் சுமார் ஆயிரம் வருடத்திற்கு ஒருதடவை துருவஸ்தானத்திற்கு முறையே வருகின்றனவென்று பூகோளசாஸ்திரிகள் கூறுகின்றனர். ஆதலால் சம்பந்தருக்கும் நமக்கும் இடையே இரண்டு துருவ நட்சத்திரங்கள்மாறுங்காலம்உளதென்று கொள்ளவேண்டியதாயிருக்கிறது. அதாவது திருஞானசம்பந்தர் காலம் நமக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் என்று கொள்ளல் வேண்டும். ஆனால் இதைத் தற்கால இலக்கிய ஆராய்ச்சி அறிஞர்கள் ஆமோதிப்பது கடினமாயிருக்கின்றது. இவ்வாறு இந்நாயனார் காலம் எந்த நூற்றாண்டென்று சொல்வதற்கே கூடாத குழப்பத்தை உண்டாக்குவதால் இது பின் ஆராய்ச்சிக்கே விடவேண்டியதா யிருக்கின்றது.

சேக்கிழார் காலமோ மூவருக்கும் சில நூற்றாண்டுகள் பிற்பட்டது என்பதை யாவரும் ஆமோதிப்பர். அக்காலத்தில் ஒவ்வொருவருடைய சரித்திரமும் கர்ணபரம்பரையில் கேட்டதை ஒருவாறு சுத்தம் செய்து மெருகிட்டுச் சேக்கிழார் எழுதலானார்.

"அடியேனுதாவா லாண்ட வரசின்சரிதப்
படியை யானறிந்தபடி பகர்ந்தே னப்பரமுனிவன்
கடிமலர் மென்சேவடிகள் கைதொழுது குலச்
[சிறையார்
முடிவில்புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினை
[மொழிகின்றேன்."

* கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்
கூறைகொண்டா றலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்
முருகன்பூண்டி மாநகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடு
மெத்துக்கிங்கிருந் தீரெம்பிரானீரே?

† இவற்றைச் சென்னைக் கவர்ன்மெண்டு மியூஸியத்தில் பார்க்கலாம்.

* என்பொடு கொம்பொடாமை
யிவைமார்பிலங்க வெருதேறி யேழையுடனே
பொன்பொதிமத்த மாலைபுனல் சூடிவந்
தென்னுளமே புகுந்தவதனால்
ஒன்பதொடொன்றோ டேழுபதினெட்டொ
டாறுமுடனாயநாள் களவைதாம்
அன்பொடு நல்லநல்லவவை
நல்லநல்லவடி யாரவர்க்கு மிகவே. சம்பந்தர்.

என்றதால், சேக்கிழார் கர்ணபரம்பரைக் கதையைத் தழுவியே அறுபத்துமூவர் சரித்திரத்தை யெழுதினாரென்று எண்ணல் வேண்டும். உலகத்தில் வழங்கும் கதைகள் நாளடைவில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், பின்னம், பேதம் முதலிய மாறுபாடுகளுக்கு உட்பட்டு எவ்வாறு அவஸ்தைப் பட்டனவோவென்பதை நாம் பிரத்திக்ஷமாய்க் கண்டறிகின்றோம். அதுபோலவே சேக்கிழாரும் அவர் கேட்ட கதைகள் காலவளவில் முன்பின் கவனியாது மாறுதலடைந்தவைகளாய் இருக்கக்கூடும். அவற்றைச் செவ்வனே ஆய்ந்து காலவரையறைக்குத் தக்கவாறு கொண்டுகூட்டி விளக்குவது உரையிற்கோடல் என்னும் உத்திக்குப் பொருத்தமாகும். அதுவே தக்கதென்பதற் கையமில்லை.

தமிழ்ப் பாடம் 108.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[92-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

நீதூது நடந்தருளி யெமதுநினை
வவர்க்குரைத்தா னினைவின் வண்ணம்
தாதூதி யளிமுரலுந் தண்பதியுந்
தாயமுந்தான் றரா னாகின்
மீதூது வளைக்குலமும் வலம்புரியு
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவனிது வசையு மன்றே. 9.

நீ சென்று கேட்டபின்னும் அவன் நாடு கொடானாகில் பின் பொருது வெல்வது பிழையன்று எனத் தருமன் கிருஷ்ணனைப் பார்த்துக் கூறுகின்றான்.

பதவுரை.

நீ - நீ, தூது நடந்து அருளி - தூதனாகப் போய் அருளி, எமது நினைவு - நாங்கள் இருக்கின்றோம் என்ற ஞாபகத்தை, அவர்க்கு - துரியோதனாதியர்களுக்கு, உரைத்தால் - சொன்னபிறகும், நினைவின் வண்ணம் - அந்த நினைவின்படி,

அளி - வண்டுகள், தாது - மகரந்தப்பொடியை, ஊதி - ஊதிக்கொண்டு, முரலும் - சப்திக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, பதியும் - நகரத்தையும், தாயமும் - எங்கள் பங்காகிய நாட்டையும், தான் - அவன், தாரான் ஆகில் - கொடுக்கானானால்,

மீது - அதன்பிறகு, ஊது - சப்திக்கின்ற, வளைக்குலமும் - சங்குக்கூட்டங்களும், வலம்புரியும் -வலம்புரிச் சங்கும், மிக முழங்க - மிகுதியாகச் சப்திக்கவும், வெய்ய - கொடிய, காலன் - யமனுடைய, மா - பெரிய, தூதர் - தூதர்கள், மனம் களிக்க- மனம் சந்தோஷங் கொள்ளவும், பொருது எனினும் - போர் செய்தாகிலும், பெறுவன் - எனது பாகத்தை அடைவேன்.

இது - இவ்வாறு செய்வது, வசையும் அன்று - பழியும் ஆகாது—(புகழிற்கும் இடமாகலாம்) என்றான் தருமன்.

விரிவுரை :—எமது நினைவு, என்பதற்கு "நாங்கள் எவ்வாறாகிலும் எமது இராஜ்யத்தை மீண்டும் அடையவேண்டும் என்ற கருத்து உடையவர்களா யிருக்கின்றோம்," எனப் பொருள் கூறலாம். அல்லது 'முன் செய்து கொண்ட நிபந்தனை,' எனினும் பொருந்தும். ஆயினும், நாங்கள் இருக்கின்றோம் என்கிற ஞாபகமே இல்லாததால் துரியோதனன் நாடு கொடுக்கும் முயற்சியொன்றும் செய்யாதவனாய்ச் சும்மா இருப்பினும் இருக்கலாம். முன் தூதுசென்றவர் அதனை வலியுறவுரைத்திருக்க மாட்டார்கள். நீயே சொல்வாயாயின், நாங்கள் இருப்பதை நினைவிற் கொண்டவனாய் அவன் எங்கள் பாகத்தைக் கொடுத்துவிடவுங் கூடும்" என்று பொருள்கொள்வது, பிறரிடம் பிழைகாணாத் தருமனுடைய பெருந்தன்மைக்குப் பொருந்தும். 'எமது நினைவு' என்பதற்கு, "நாங்கள் இருக்கின்றோம் என்பதோடு, எங்கள் ஆற்றல் வீரம் முதலியவைகளையும் அவர்களுக்கு நினைவு படுத்து" என்று அச்சுறுத்தும் மொழிகளைப் பகரச் சொன்னான் எனக் கருதுதல், தருமனுடைய சாந்த குணத்திற்கு ஏற்றதன்று.

குறிப்பு:—நடந்து + அருளி = நடந்தருளி; அவர்க்கு + உரைத்தால் = அவர்க்குரைத்தால்; தாது + ஊதி = தாதூதி; பொருது + எனினும் = பொருதெனினும்;—குற்றியலுகரங்களுக்குப் பின் உயிர்வர, அக்குற்றியலுகரங்கள் கெட்டுப் புணர்ந்தன.

நினைவு + அவர்க்கு = நினைவவர்க்கு—வகரமெய்யின் மேல் ஏறிய முற்றியலுகரத்திற்குப் பின் உயிர்வர, அம்முற்றியலுகரம் கெட்டது.

தூது + நடந்து = தூதுநடந்து; எமது + நினைவு = எமது நினைவு, மிக + முழங்க = மிக முழங்க; முழங்க + வெய்ய = முழங்க வெய்ய; இது + வசை = இது வசை;—நிலைமொழி யிறுதியில் உயிரும், வருமொழி முதலில் மெல்லின இடையினங்களும் வர, அவை இயல்பாய்ப் புணர்ந்தன.

அருளி + எமது = அருளி யெமது; ஊதி + அளி = ஊதியளி ? பதி + உம் = பதியும் ; புரி + உம் = புரியும். நிலைமொழி யிறுதியில் இகர உயிரும், வருமொழி முதலில் உயிரும் வர, அவை யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தன.

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி
னடந்துழவர் முன்றி றோறு
நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு
நாடொன்று நல்கா னாகி
லைந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண்
டவைமறுத்தா லடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே. 10.

துரியோதனனிடம் உரைக்க வேண்டிய தூது இதுவென்று தருமன் கிருஷ்ணனுக்குச் சொல்கின்றான்.

பதவுரை

சிந்தூரம் - குங்குமத்தாலாகிய, திலகம் - திலகத்தை அணிந்த, நுதல் - நெற்றியை உடைய, சிந்துரத்தின் - (குவலயாபீடம் என்னும்) ஆனையினது, மருப்பு - தந்தங்களை, ஒசித்த - ஒடித்த, செம் கண் மாலே - (தாமரை போல்) சிவந்த கண்களையுடைய கிருஷ்ணனே,

முந்து - தனக்கு முன்னால், ஊர் - ஏந்திச் செல்லப்படுகின்ற, வெம் - கொடிய, பணிக்கொடியோன் - பாம்பினது வடிவம் எழுதப்பெற்ற கொடியையுடைய துரியோதனனது, மூது ஊரின் - பழமையான நகரமாகிய அஸ்தினபுரிக்கு, நடந்து - நீ சென்று,

உழவர் - உழவர்களது, முன்றில் தோறும் - முற்றங்களிலெல்லாம், நந்து - சங்குகள், ஊரும் - தவழ்கின்ற, புனல் நாட்டின் - நீர்வளம் பொருந்திய நாட்டினது, திறம் - எங்கள் பாகத்தை, வேண்டு - கொடுக்கும்படி கேள்,

நாடு ஒன்றும் - நாடென்பது எவ்வளவும், நல்கான் ஆகில் - கொடுக்க மறுத்துவிட்டால், ஐந்து ஊர் - ஐந்து ஊர்களாகிலும், வேண்டு - கொடுக்கும்படி கேள்,

அவை - ஐந்து ஊர்களும், இல் எனில் - கொடுப்பதில்லை என்று அவன் சொன்னால், ஐந்து இலம் - ஐந்து வீடுகளாகிலும், வேண்டு-கொடுக்கும்படி கேள்,

அவை மறுத்தால் - அவ்வீடுகளும் கொடுக்க மறுப்பானால், அடு போர் வேண்டு - கொல்கின்ற யுத்தத்திற்கு வரும்படி சொல்—(என்றான் தருமன்).

விளக்கம்:—கம்ஸனது பட்டத்து யானை குவலயாபீடம். தன் அரண்மனைக்குள் வரும் கிருஷ்ணனைக் கொல்லும்படி அந்த யானையைக் கம்ஸன் ஏவினான். அப்பொழுது கிருஷ்ணன் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களையே பறித்து ஆயுதமாகக்கொண்டு யானையைக் கொன்றிட்ட கதை இங்குக் குறிக்கப்பட்டுள்ளது. "கூடத்துக் கம்பவள மா வென்றான்" என்று அஷ்ட பிரபந்தத்தில் குறிக்கப்பட்டிருப்பதும் இது.

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள
நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற்
றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம்
பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர்
மணிமார்பா புன்மை யாவுந்
தீர்த்தோனே யூனமிலான் மானமிலா
துரைப்பதற்கென் செய்வ தென்றான். 11.

தருமன் அவ்வாறு பணிந்துகூறப் பீமசேனன் வெகுண்டு மறுத்துரைக்கத் தொடங்குகின்றான்.

பதவுரை.

மூத்தோன் - பாண்டவரில் மூத்தவனாகிய தருமன், (மற்று - அசை) இவை-இவ்வார்த்தைகளை, உரைப்ப- சொல்லவும்,

இளையோன் - அவனுக்கு அடுத்த தம்பியாகிய பீமசேனன், வெம்சினம் - கொடியகோபம், மனத்தில் - தன் மனத்தில், மூளமூள - மேன்மேல் உண்டாகவும், நா - நாக்கில், தோம் இல் - குற்றம் இல்லாத, உரை - வார்த்தைகள், பதற - பதறவும், கதும் என- விரைவாக, உற்று எழுந்து - எழுந்தவனாகி, இறைஞ்சி - வணங்கி,

ஞாலம் எலாம் - உலகங்களையெல்லாம், பூத்தோனே - (உந்தித் தாமரையிலிருந்து) சிருஷ்டித்தவனே; பூ - தாமரைப்பூவாகிய, தவிசில் - ஆசனத்தில் அமர்ந்த, பூவை - இலக்குமி, புணர் - சேர்ந்த, மணி - அழகிய, மார்பா - திருமார்பை யுடையவனே, புன்மை யாவும் - அடியார்களாகிய எங்களது சிறுமைகளை யெல்லாம், தீர்த்தோனே - தீர்த்தவனே,

ஊனம் இல்லான் - சிறிதுங் குற்றம் இல்லாதவனாகிய இத்தருமன், மானம் இலாது - மானமும் இல்லாமல், உரைப்பதற்கு - இவ்வாறு சொல்வதற்கு, என் செய்வது - நானென்ன செய்வேன், என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—ஸஹோக்தி என்று வடமொழியில் அழைக்கப்படும் புணர்நிலையணி (இதற்கு ஒருங்கியல் அணி, உடனிகழ்ச்சியணி என்ற பெயர்களும் உள) இப்பாசுரத்தின் ஈற்றடியில், "ஊனமிலான் மானமிலாதுரைப்பதற்கு என்செய்வது" என்ற வாசகத்தில் அடங்கியிருக்கின்றது. இவ்வணியின் இலக்கணத்தை 1-வது வால்யூம் 829-வது பக்கத்தில் விரிவாக விளக்கி இருக்கின்றோம். இன்மை என்னும் பண்புபற்றி, ஊனம் மானம் என்னும் இரண்டையும் கவி மிகவும் சாமர்த்தியாகத் தருமனுக்குச் சேர்த்திருக்கின்றார்; ஆதலால், இது பண்புப்புணர்நிலை அணியாகும். "ஊனம் ஒன்றும் இல்லாதது தக்கதே, ஆனால் ஊனம் என்ற சொல்லிற்குப் பிராசமாகிய மானம்கூடவோ இவனிடம் இல்லாமற் போகவேண்டும்" என்று பீமன் தன் வெறுப்பை வெளிப்படுத்துவதில் மிகுந்த நயம் அமைந்திருக்கின்றது.

விரிகுழற்பைந் தொடிநாணி வேந்தவையின்
முறையிடுநாள் வெகுளே லென்று
மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந்
தீராத வசையே கண்டாய்
எரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம்
பகைமுடிக்க விளையா நின்றாய்
அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ
யுனதருளுக் கஞ்சி னேனே. 12

இன்னமும் ஏன் நீ போரிடப் பின்னிடைகின்றாய் என வீமன் தருமனை இடித்துரைத்தல்.

பதவுரை.

விரி - விரிந்த, குழல் - கூந்தலையுடையவளாய், பைந்தொடி - பசுமையான வளையலை அணிந்த திரௌபதி, நாணி - வெட்கம்கொண்டு, வேந்து அவையில் - இராஜசபையில், முறையிடும் நாள் - (என் மானத்தைக் காக்கமாட்டீர்களோ என்று) முறையிட்ட பொழுது, வெகுளேல் என்று - கோபியாதே என்று எங்களை அடக்கி, மரபினுக்கும் - நமது குலத்திற்கும், நமக்கும் - நமக்கும், உலகு உள் அளவும் - இவ்வுலகம் இருக்கின்றவரையில், தீராத - நீங்காத, வசையே கண்டாய் - பழியே சேர்த்துவைத்தாய்,

எரி - எரிகின்ற, தழல் - நெருப்பைப்போன்ற, கானகம் - காட்டினை, அகன்றும் - நீங்கியும், இன்னமும் - இன்னம்கூட, வெம்பகை - நமது கொடிய பகையை, முடிக்க - துரியோதனனிடம் முடித்துக் கொள்ள, இளையாநின்றாய் - தளர்கின்றாய்,

அரவு உயர்த்தோன்-பாம்புக்கொடியை உயர்த்தினவனாகிய துரியோதனனது, கொடுமையினும் - கொடு

189090.

மையைக்காட்டினும், முரசு உயர்த்தோய் - முரசுக் கொடியை உயர்த்திய தருமனே, உனது அருளுக்கு - உன்னுடைய கருணைக்கே, அஞ்சினேன் - யான் பயப்படுகின்றேன்.

விரிவுரை:—மன்னர் முன்னிலையில் துச்சாதனன் திரௌபதியைத் துகிலுரிந்தபோது, முறையோ இது வென அவள் ஓலமிட, வீமனும் அர்ச்சுனனும் கோபத்தோடு அப் பாதகர்களைக் கொல்லக்கருதி எழுந்திருக்கவும் தருமன், சூதிலே தாம் தோற்றிருந்ததற்குக் கட்டுப்பட்டுக் கோபியாதிருக்கும்படி தம்பியர்களை அமர்த்திய செய்தியை வீமன் இங்குக் குறிப்பித்து, அதனால் தமக்கு நேர்ந்த பழியைச் சொல்லி இரங்குகின்றான். "அப்பொழுதுதான் உண்மைக்குக் கட்டுப்பட்டு அவ்வாறு ஒடுங்கியிருந்தோமென்றால், நிபந்தனையின்படி பன்னிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் கழித்தபின்னும், மறுசொல்லில்லாமல் அவனைப் போரிற்கொன்று நம் பகையை முடித்துக் கொள்வதற்கு யாது தடை. அவ்வாறின்றி அவனிடம் ஐந்தூரும் ஐந்து வீடுங் கேட்டுக் கிடப்பானேன். துரியோதனனது கொடுமைக்கு நான் பயப்படவில்லை. ஏனெனில் அதனால் வந்த பழியைத் தீர்த்துக்கொள்ளினும் கொள்ளலாம். நீ இப்பொழுது அவனிடம் காட்டுகின்ற அருளினால் அப்பழியைத் தீர்த்துக்கொள்ளும் வழியே இல்லாமற் போய்விடுகின்றதினால், இதற்கே நான் பெரிதும் அஞ்சுகின்றேன்" என்பது வீமனது கருத்து.

குறிப்பு:—வேந்து + அவை = வேத்தவை, என்று ஆவதற்கு விதி, முன் 2வது வால்யூம், 988 வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது. வேந்து என்பதன் ஈற்றிலுள்ள உகரம் (அதற்கு அயலில் இருப்பது ந் என்னும் மெல்லின மெய்யாகையால்) மென்றொடர்க்குற்றியலுகரமாகும். நிலைமொழியிறுதியில் மென்றொடர்க் குற்றியலுகரமும் வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருமாயின், அவ்வுகரம் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிக்கொள்வதுமல்லாமல், நிலைமொழி ஈற்றிற்கு அயலெழுத்தாயிருந்த மெல்லினமெய்யும் சிலசமயம் அதற்கினமான வல்லின மெய்யாகவுந் திரியலாம், என்று கூறியதற்கிணங்க, வேந்து அவை, என்பது வேத்தவை என ஆயிற்று.

இவ்வாறு திரிவன சிறுபான்மையே; பெரும்பான்மை திரிவதில்லை. எந்தஎந்தத் தொடரில் திரியும், எந்தஎந்தத் தொடரில் திரியாது என்று வரையறுத்துச் சொல்வதற்கில்லை. வழக்கைக் கொண்டும் பெரும் புலவர்கள் எழுதியுள்ளசெய்யுள்களைக்கொண்டும், திரிகின்ற சொற்கள் இவை, திரியாத சொற்கள் இவை என்று நாமாகத் தேர்ந்து வைத்துக்கொள்வதொன்றே கூடும். எனினும், வழக்கிலும் செய்யுளிலும் இவ்வாறு திரிந்து வருவனவற்றை முறைப்படுத்திப் பார்க்கும்போது பெரும்பான்மை பொருந்தக் கூடிய சில குறிப்புக்கள் தோன்றுகின்றன:—

i. ங் ஞ் ண் ந் ம் ன், என்னும் ஆறு மெல்லின மெய்களில் ண் என்னும் மெய் ஒருபோதுந் திரிவதில்லை:—

வண்டு + ஈட்டம் = வண்டீட்டம்
நண்டு + ஓட்டம் = நண்டோட்டம்.

ii. மற்றவை திரியுமெனின் ஆறும் வேற்றுமைத் தொகையில் திரிகின்றன—

குரங்கு + இனம் = குரங்கினம்
வேந்து + அவை = வேத்தவை
வேம்பு + இலை = வேப்பிலை
(னகரமெய் ஆறும் வேற்றுமைத்தொகையில்
திரிவதற்கு உதாரணம் தென்படவில்லை)

எனினும்,

பந்து + அழகு = பந்தழகு; கம்பு + உயரம் = கம்புயரம்; தெங்கு + இலை = தெங்கிலை, என ஆறும் வேற்றுமையிலும் திரியாமலிருக்கவும் இருக்கும்.

iii. ஆறும் வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகளில் உருபுமாத்திரம் தொக்கு இருக்கின்ற தொடர்களில் திரிவதில்லை. உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் திரிந்துவரக் காண்கின்றோம்:—

இருப்பு + ஆணி = இரப்பாணி— (இரும்பினால் செய்த ஆணி) மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

கன்று + ஆ = கற்றா (கன்றோடு கூடிய ஆ) மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வேம்பு + எண்ணெ = வேப்பெண்ணெ. (வேப்பம் பழத்திலிருந்து செய்த எண்ணெ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

கரும்பு + ஆலை = கருப்பாலை (கரும்பைப் பிழியும் ஆலை) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

நஞ்சு + அரவு = நச்சரவு (நஞ்சை உடைய அரவு) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

iv. பண்புத் தொகையில் ன் என்னும் மெய் திரியலாகின்றது:—

என்பு + உடம்பு = எற்புடம்பு (எலும்பாகிய உடம்பு)

பெரும்பான்மை இவ்வாறு திரிகின்றனவென்று கூறினோமேயன்றி, இவைகள்தாம் விதிகள் என்று எண்ணவேண்டா. இவைகளுக்கு மாறாக வழங்கப் பெற்றிருப்பனவும் இருக்கலாம்.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனு மாய—கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தர கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு)

மானேஜர் :—"கலா நிலயம்", 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய் மொழியின் ஏற்றம்

[86-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பரும் நம்மாழ்வாரும்.

பின்னொரு விஷயம். நம்மாழ்வாரும் ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில கவியும் மாத்திரமே யாமறிந்தவரையில், மானிடரின் மனதில் சஞ்சரித்து உலாவும் ஆசாபாசங்கள் லோபம் குரோதங்கள் மதமாச்சரியங்கள் ஸம்சயதேர்ச்சிகள் இவைபோன்றஇயல்புகளைச் செவ்வனே ஆராய்ந்துணர்ந்து அதின் நுட்பங்களைப் பகுத்தறிவார்கள். ஆகையால்தான் இவர் எக்காலத்திலும் எவ்விதக் குணமுடைய மானிடர்களுக்கும் உள்ளத்தின் அகத்துறைந் தியங்கும் மனோபாவங்களைக் கூற வல்லராகின்றார். ஏனையகவிகள் இவ்விதம் மானிடரின் மனப்பகுதியின் பற்பல உணர்ச்சிகளில் புகுந்து அவைகளின் வரையறுப்பை முழுவதும்உணரப்பெறாதவர், ஆதலின் நம்மை அவர் துனித்துரைக்கவல்லாரல்லர். மற்றொரு விசேஷம் இம்மஹானிடத்தில் யாம் கண்டது. இவர் நம் மனதை நம் சுயமுயற்சியால் ஏறக்கூடாத உன்னதஸ்தானத்தில் தூக்கி அந்நிலையில் தாம் போதிக்கும் அன்புவாய்ந்த உக்திகளால் அதை நிலைநிறுத்தி ரஸாநுபவமும் அதிசய ஆநந்தமும்பெற முடுக்கிவிடுவதே.இப்படி மாண்பைப் பெறுவிக்கும் காலை நாம் அவர்போன்ற விசால மனதுடையவராகி மாண்பும் நற்பதவியும் பெறுகிறோம். இம்மஹான் பிரபந்தங்கள் சர்வாங்க சுந்தரியாதலால் எவ்விடத்திலும் இம்மாண்பை அளிக்க வல்லதாயினும் உதாரணங்களாகச் சிலவற்றை இவ்விடத்தில் குறிப்போம். "கோவைவாயாள் பொருட்டு"-4-ம் பத்து 3-ம் பதிகம். "சீலமில்லாச் சிறியனேனும்"-4-ம் பத்து 7-ம் தசகம். "வீற்றிருந்தேழுலகம்"-4-ம்பத்து5-ம் தசகம். "என்றைக்கும் என்னை உய்யக் கொண்டுபோகிய" 7-ம் பத்து 9-ம் பதிகம்.-"செஞ்சொல் கவிகள்"-10-ம் பத்து 7-ம் பதிகம். "அருள் பெறுவ ரடியார்"-10-ம் பத்து 6-ம் பதிகம். 'திருமாலிருஞ் சோலைமலை யென்றேன்" - 10-ம் பத்து 8-ம் பதிகம். இத்தசகங்களைப் படிப்பவர் எவ்வளவு கடினசித்தரேனும் இவை அவர்களின்மனதை ஈர்த்து இழுத்து மாண்புபெற முடுக்கிப் பெரும்பேற்றை உண்டாக்கவிடுமென்று கூறத்துணியலாம். இவ்வியாஸம் பூவுடன் நாறும் மணம்பெற்ற நீதியாய், கம்பநாட்டாழ்வார் சடகோபர்அந்தாதி 23 வது செய்யுளில் கூறியபடி, நம்மனம் அப்புலவர்மனம் போல் நாட்ட முறுவதால் அச்செய்யுளைக் இங்குக் கூறுவோம்.

போந்தே றுகவென் றிமையோர்
புகலினும் பூந்தொழுவின்
வேந்தே றடர்த்தவன் வீடே
பெறினும் எழிற்குருகூர்
நாந்தே றியவறி வன்திரு
வாய்மொழி நாளுநல்குந்
தீந்தேற லுண்டுழ லுஞ்சித்தி
யேவந்து சித்திக்குமே.

[தேவர்கள் ரதம்கொண்டுவந்து என்னை அழைத்தாலும் அழகான தொழுவில் ஏழு காளைகளை அடக்கி அடர்த்தவனாகிய வத் தாமரைக்கண்ணன் உலகுபெறினும், குருகூர்ப் பேறிவாளனாகிய நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியாகிய இனிய தேன் சுவையைத் தினந்தோறும் உண்டு உழலும், ஒப்பற்ற பயனை யாம் பெறும்படி நமக்குக் கைகூடட்டும்]

"குருகைக்கோன்" "ஓதும்" "வேதத்தியல்" யாழினிசையென்றும் "ஸர்வஜநாது மோதனமென்றும்', "பக்தர்களுக்கு அமிர்தமென்றும்" கம்பருக்கு முன்னுள்ள பூர்வாசரியர்களும் கூறுவார்கள்.

இந்தப்பிரபந்தத்திற்கு மற்றொரு ஏற்றமுளது.இவ்வாழ்வார் தாம் திருவுள்ளத்தாலே பகவானை அநுபவித்ததில் அதில் தோய்ந்து அவன் திவ்வியஸௌந்தரியத்தை எடுத்துக்கூறுவதாம். வேதத்தில் ஏற்றமாகக் கூறியுள்ளவைகள், ஸத்தியம் ஞானம் ஆனந்தம் சக்தி நிரந்தர யௌவனம், பரமகாருணிகத்துவம்இவைபோன்ற திவ்விய குணங்கள். அவ்வேதம் அவனுடைய திவ்விய ஸௌந்தரியத்தை ஓரிடத்தும் பிரத்தியேகமாய் எடுத்துக்கூறவில்லை.பகவானைவர்ணிக்கும்போது பொன்வர்ண முள்ளவன், பொன் மீசையுடையவன், திவ்விய பொன்கூந்தல் உடையவன்,என்றுகூறியுள்ளதைக் கொண்டு, ஒருவருக்கும் அவனுக்குத் திவ்விய வடிவழகு (ஸௌந்தர்யம்) பக்தர்களுக்கு உபாதேயமான பற்றுக்கோடு என்று உணரலாகாது. இவ்வாழ்வார்தான் திருவாய்மொழியில் இவ்வடிவழகு தனக்கு ஒருபற்றுக்கோலாய் வாய்ந்தது என்றும் அதுவே அவனை மறக்கவொண்ணாத பற்றாசாகத் துணை நின்றதென்றும் 8-ம் பத்திலும், அங்குமிங்கும் பரக்கவும் கூறியுளார். சென்றுபோன வியாஸத்தின் முன் வியாசத்தில் 8-ம் திருவாய்மொழி 7-ம் பதிகம், 7-8 பாசுரங்களில் பகவான் தன் திவ்விய ஸௌந்தரியத்தை இவருக்குத்தோற்றுவிக்க,இம்மஹான் அதன் துணைகொண்டே பகவானை உள்ளத்தில் அணைத்ததாகச் செப்பியுளோம்."இவர், தம்மைச் தாழ்ச்சியாய் நினைத்து என்னுடன் கலவிக்கு உரியவரல்லரென்று விலகிவிட்டால் யான் என் செய்யக்கடவது?" என்ற சங்கையால் பகவானே ஆழ்வாருக்கு அவரது பரிசுத்தாத்ம சுவரூபம் தமக்கு இன்றியமையாததாகவும் பிரிக்கக் கூடாததுமான மங்களத்துவ முளதென்று காட்டிக்கொடுத்தார் என்றும் விவரமாய் எழுதியுள்ளோம். இவ்வியாஸத்திலேயேசற்றுமுன் மற்றுமொரு குறிப்பு வந்துளது. சடகோபர் அந்தாதியில் கம்பர் பகவானிடத்தில் பக்தியை முதலில் முளைப்பிக்க அவன் அவதார அதிசய செய்திகளே பக்திவிரையிட நல்ல நாத்தங்கால் என்றது, பகவத்கீதையில் தன் அவதாரங்களில் தன் ஒளி மாண்பு திவ்விய உரிமைகள் எல்லாம் அகப்படத்தான் ஜந்மிப்பதாயும் இந்த ரஹஸ்யங்களை உணர்ந்தவர் ஸர்வ பாபங்களையும் போக்கடித்துக் கொள்வார்களென்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஓதியுள்ளார். அவனிடத்தில் ஈடுபாட்டுக்கு, அவதாரங்களில் அவனுடைய ஸௌலப்பியம்ஸௌசீலியம் திவ்விய சரிதம் இவைகள் சுலபமாயும் ரசமாயும் அமைந்துள்ள துறைகள் என்று மேற்படி பக

வத்கீதையிலாவது வேதத்திலாவது ஓதவில்லை. இம்மஹானே அவதார இதிஹாஸ திவ்விய சரிதைகள் பக்தர்களுக்கு வாய்ந்த துறைகளென்று அந்தச் சரித்திர வெண்ணெய் திருடல் முதலான சௌரிய உல்லாஸங்களிலும் தம்மன மகப்பட்டு அதில் ஏங்கி ஈடுபாடு பட்டாரென்று நமக்குக் காட்டிக்கொடுக்கிறார். தாம் இறங்கிய இந்தத் துறை பிறர்களுக்கும் உபாயமென்றும் உபாதேயமென்றும், கற்பவர்கள் உணர்ந்து கொள்வார்களென் றன்றோ தம் உள்ளத்தின் நிகழ்ச்சியைநமக்குவெளிப்படையாகஉரைத்தது. இச்செய்தி முதல்பத்து இரண்டாம் தசகத்தில் பக்தியோகத்தை அனுஷ்டிக்கப் புத்திமதிகூறி மனோ வாக்கு காயங்களாலே அவனை வழிபடுங்கோள் என்று உபதேசித்துப் பின்னர் மூன்றும் தசகத்தில் முதற்பாட்டில் எம்பெருமானைக் காணவேண்டுமென்ற அபேக்ஷை யுடையவர்களுக்குக் காணலாம்படி எளியனும் பிரதிகூலருக்குக் காண்கைக்கு மிகஅரியனுமாவான் என்பதைச் செப்புகின்றார். ஒருவருக்கு காண்கைக்குச் சுலபனாகியவன் மற்றொருவருக்கு அரியனாவது அவனது விசித்திரமான குணாதிசயம் என்று செப்பிப் பிறகு அவனுடைய ஆச்ரதசுலபத்தை அருளிச்செய்யுமிடத்தில் கிருஷ்ணாவதாரத்தில் யசோதைப் பிராட்டியார் தயிரை மத்தால் கடைந்து திரட்டிய வெண்ணெயை அவளறியாமல் திருடி விழுங்கியவளவில் அவளாலே உரலிலே கயிற்றால் கட்டுண்ட கண்ணன் நிச்சேஷ்டிதனாய் உள்ளும் புறமும் மெய்யாக நடுங்கின எளிமையை அநுஸந்திக்கிறார். இடைக்குலத்தில் அவதரித்தது போதாதோ? இதுவே உன்னுடைய சுலபத்துவத்துக்கு அறிகுறியாக அமையாதோ? இங்ஙனம் உரலிலே கட்டுண்டு நடுங்கி இருந்தருளவேணுமோ? சாக்ஷாத் மகாலக்ஷ்மியே ஆசைப்பட்டு அடைகிற அருமைப் பேறான நீ, வளர்த்தெடுத்த யசோதாபிராட்டிக்கு நடுங்கியருளவேண்டுமோ? இதுஎன் செய்தருளினாய்? எதுக்காக'' என்று ஆழ்வார் எண்ணி விஸ்மயப்படுகிறார். இந்த அநுஸந்தானத்தால் ஆழ்வார் மோகமடைந்து ஆறுமாதம் கழித்துத் தம் முழு உணர்ச்சியைப் பெற்றாரென்பது ஐதிகம்

பாசுரம்.

"பத்துடைய யடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர் மகள்விரும்பும் நம்அரும் பெறலடிகள்
மத்துறு கடைந்தவெண்ணெய் களவினில் உரலிடை
[யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே"

"கற்பார் இராமபிரானை யல்லால்" என்கிற பாட்டிலு, அவதார திவ்வியம்சரிதைகளில் இறங்குவது பக்தர்களுக்குச் சுலபமாயும் இனிமையாயும் வாய்ந்த துறை என்று காட்டிக் கொடுக்கிறார்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

மன்னர்க்கு முண்டோ மறம்.

96-வது பக்கத் தொடர்ச்சி.

கருதிய பயனென்று கைவரற்குரிய நினைவிலராய்ப் பெரிதினிற் பெரிய பேரறத்தின் தனிநிலைத் தூய்மையை நுனித்துணர்ந் துரைக்க வல்ல மேன்மை, கலைபொலி கவிஞர் திறத்தே யுளது. தொழில் குலம் அனைய புறத்துறு வேறுபாடுகளைச் சார்ந்துநிற்கும் அறங்கள் சிற்றறங்களென்று செப்புதற் குரியன. காலமிட முபாயங்களை நோக்கிப் படரும் இவ்வறத்தின் குறுநெறி, நாடிய பொருளின்பால் உய்க்கலாம் என்னுமோ ருணர்வினால் தொடரப் பெறுகின்றது. அப்பொருள் நற்பொருளாயின் அந்நெறி நன்னெறியென்றே நினைக்கின்றனர் உயர்ந்தோரி லொருசாரார். அந் நெறியின்கண் நிகழ்த்த வேண்டிய சில கருமங்கள், அவைவரையில் அறமல்லன வாயினும், முடிந்தபொருளை யுன்னுங்கால் மறமென்று மறக்கப்படுவதில்லை. இராஜ தர்மமென்பது இவ்வகைச் சார்பறத்தைச் சேர்ந்த செய்தி. இராஜ தந்திரம் என்று அது குறிக்கப்படுவதினாலேயே அதன் பழி வெள்ளிடைமலையாய் நிற்கின்றது. துனியின்றித் தன் குடிகளைக் காக்கின்ற கடமை பூண்டிருக்கின்றான் அரசன். இந்நோக்கத்தைக் கருதுங்கால் அவன் பெருமை அளவிடற் பாலதன்று. குடிகாக்கும் வேந்தனது உண்மையிலக்கணத்தின்படி அவன் பகைவரை யடக்குவதும், பொருள் ஈட்டுவதும், பற்பல யாகங்கள் செய்வதும் ஒன்றும் தன் பொருட்டன்று. இவைகளால் வரும் செல்வம் செல்வாக்காதிய நலங்களின் பயனைத் தான் நுகரவேண்டுமென்ற நோக்கம் அவனுக்கில்லை. தன்னுடைய மனதை அடக்கிச் செயித்திருத்தலே அரசனது மூல இலக்கணம் எனப் பீஷ்மர் நவின்றுளர். காமக்குரோதங்களை முன்னிட்டு அரசினை மேற்கொள்ளும் மன்னவன் தன்னுடைய கடமைக்குத் துரோகஞ் செய்தவனாவானென்பதற் கையமில்லை அரசன், தன் தேகத்தை யூபஸ்தம்பமென்றும், தனது உயிரை அதனிற் கட்டியுள யாகப்பசுவென்றுங் கருதி, தானென்னும் முழுமையையும் குடிகளின் நன்மைக்காகப் பலியாக்கும் கொள்கையனா யமையவேண்டுமென்று பீஷ்மர் விளக்கிக் காட்டியிருக்கின்றார். அரசனது முதலாய நோக்கமும் முடிவாய பயனும் இவையாயின், அரசுத்தொழில் அறமே யுடைத்தென்றெண்ணுதல் நேரிதே. முதலுங் கடையு மிவ்வாறு செயிரறு செம்மையே குறித்திருக்க இடையுறு கருமங்கள் சில அறத்தினோ டியைபற்று நிகழ நேர்கின்றன. தன்வயின் பிறந்த மைந்தன்முதல் மாற்றரசனீறாக யாவரையும் ஒற்றர்கள் பார்வைக் குட்படுத்தி ஒருவரையும் நம்பாது அஞ்சுகின்ற கொள்கையின் நிகழ்வதால் இழிவுடைத்தே. சத்துருவை, விஷத்தாலும் நெருப்பாலும் சூனியத்தாலும் வருத்தித் தொலைப்பது தாழ்மையேயன்றித் தாளாண்மையாகாது. சந்தி விக்கிரகம் இலஞ்சம் முதலியவைகளால் பகைவன் பலத்தைக் குறைக்குந் தந்திரம் அறமென்பதற்கு அடியுடன் அயலாகிக் கழிகின்றது. யுத்த இரகசியங்களையும் மற்று அரசியல் இரகசியங்களையும் வெளியிடாமல், தன்னுடைய கருத் தின்னதென்று ஒருவரும் அறிய இயலாவகை விகரிக்கின்றவிரகு விரும்பற்பாலதன்று. எனின், பீஷ்மரிடம் இத்தகைய விடயங்களைக் கேட்டுவரும் யுதிட்டிரன்,

"சுவாமி, இது கேட்கும்போது ஒரு க்ஷணங்கூட எனக்கு இராஜ்யம் வேண்டாம் என்று எண்ணுகிறேன். நான் ராஜ்ய சுகத்தை அபேக்ஷிக்கிறவ னல்லன். தர்மத்திற்காக ராஜ்யத்தை அபேக்ஷிக்கின்றவனுடைய இராஜ்யத்திலேயே தர்மம் இல்லை. எனக்கு இராஜ்யம் போதும்..............."

என்று கைவிதிர்த்துக் கழறியது வியப்பாமோ! பீஷ்மரும் இத்தகைய இழிவுடை இடைச்செயல்கள் தம் வரையில் மறமல்லவென்று வாதிக்கப் புகுந்தாரலர். தத்தம் வரையில் இவை ஒவ்வொன்றுந் தீச்செயலே யாயினும், தன்னுடைய இலாபத்திற்காக அவை புரியப்படாமையாலும், குடிகாக்குங் கடமைக்கு அவை இன்றியமையா திருத்தலாலும், இவைகளைப் புரிவதால் வேந்தன் தனக்குரிய அறத்தினின்று பிறழ்ந்தவனாகானென்னுங் கொள்கையராய்,

"தானம், அத்யயனம், யக்யம், பிரஜாபாலனம், இவைகள் உமக்குத் தர்மமோ அதர்மமோ, அதைச் செய்கிறதற்காகத்தான் பிறந்திருக்கின்றீர். ராஜ்ய பாரத்தைத் தாங்குகிற ராஜாக்களுக்கு என்ன கெடுதி வந்தாலும், கீர்த்தி கெடமாட்டாது. வேத வசனத்தினால் ராஜ்யத்தை ரக்ஷிக்கிற உமக்குத் தோஷமில்லை. தர்மத்தைச் செய்கிற கிரகஸ்தாச்ரமியோ, பிரம்மசாரியோ, ராஜாவோ, எவரானாலும் சூக்ஷ்மமான அதர்மங்கூட இல்லாம லிருக்கமாட்டார். எந்த வேலையில் தோஷம் சுவல்பமாகவும், குணம் அதிகமாகவும் இருக்கின்றதோ அந்த வேலை உத்கிருஷ்டமானதுதான். ......ஐயிக்க அபேக்ஷயோடு கூடின இராஜாக்களிடம், தர்மம் அதர்மம் இரண்டும் இருக்கும்."

என அதர்மத்தை அதர்மமென்றே வைத்துக்கொண்டு அதற்கோர் அமைதியே காட்ட முயன்றிருக்கின்றார் பீஷ்மர். குணநாடிக் குற்றமுநாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளும் கொள்கை யிது வள்ளுவரும் ஒருவாறு ஏற்றுக்கொண்டதே. தவணை கடந்ததற்கீடாகக் கடன்பட்டோன் தசையைக் கேட்ட யூதனது நாடகத்தில் ஷேக்ஸ்பியர், பெரு நலம் பயக்குமென்று சிறுபிழை செய்தல் நீதியே எனக் கருதினவர்போல் பஸானியோ என்னும் பாத்திரத்தின் வாயில் ஒரு வாசகம் அமைத்து வைத்தார்.

இவ்விதக் கொள்கையும் அமைதியும், தக்கதென்றும் அன்றென்றும் வரையறுத்துரைத்தல் யாவர்க்கும் அருமையாம். மெய்யுணர்வுடைய வியாசர் வகுத்துள முறையைச் சோதிக்கப்புகுவோர் அதற்கு முன் தம்முடைய ஆற்றலைச் சோதித்துக் கொள்ள வேண்டுமாகையால் வாய்வந்தன கூறும லடங்குகின்ற நன்மை ஏற்படுகின்றது. எனின், புலமையிற் சான்ற சில பெரியோர், உரையாலும் இங்கிதங்களாலும் இத்திறத்தில் தம் கருத்தை உணர்த்துகின்றாரோவென நாமுஞ் சிறிது ஒற்றாடுவதே உத்தமமாதலின் பிற்றைநாளதனைச் செய்யத்துணிவோம்.

இலஞ்சிப் பாவை.

6. இராதாகிருஷ்ணன் வருகை.

[95 வது பக்கத் தொடர்ச்சி]

சனந்தொடர்ந்து பின்வரத் தடங்கடந்து சென்றவெஞ்
சினந்தொடர்ந்த வெம்பரித் திரிசங்குதந்த மைந்தனும்
மனந்தொடர்ந்து கொண்டவல்லி மன்னுகன்ன மாபுரிக்
கனந்தொடர்ந்த மாமதிற் கபாடவாயி லெய்தினான்.

அரிச்சந்திரபுராணம்.

வந்துசென்ற விருந்தினனைப்பற்றி யாதுநினைக்கின்றீரெனச் சுதஞ்சனைவினவுதலும், ஆலாலசுந்தரர் உயிர்ப்பு வீங்கி, "அவனைப்பற்றி என்ன நினைக்கின்றேனா? அந்தநாடோடி வந்தவேளை நல்லவேளையாய்த் தோன்றவில்லை. அவன் இவ்வீட்டில் அடிவைத்த அக்கணமே, பற்பல மந்திரங்கள் ஓதப்பெற்றுக் கொல்லன் உலைக்களத்தில் சமைக்கச்செய்த உனது தந்தையின் பட்டயம் தானே உறைநீத்துக் கீழே விழுந்துவிட்டதே; அதனால் அவன் மறைந்து வந்த எதிரியென்று புலப்படுகின்றது. அவன் அரசாது வேவுகாரரில் ஒருவனாயிருந்தால் ஸ்ரீபாலரது கதி என்னவாகும்? இத்தீவும், இதுவரை பிடிபடாததும், ஒருவராலும் அறியாததுமான இக்காட்டரணும், எவ்வாறாகும்? வேவுகாரனுமின்றி, எதிரியுமல்லனாயினும், ஐயங் குடிகொண்ட மனத்தினனாகிய இராதாகிருஷ்ணன் என்ன சொல்லான்? வீணில் தலையை யசைத்துவிடாதே. தலையை யசைத்துவிட்டால்உண்மை மறைந்துபோகுமா? முன்னொருமுறை இராதாகிருஷ்ணன் இருக்க, மால்வண்ணனோடு நீ கவறாடிய காலத்து அதனால் அவர்களிருவருக்கும் உண்டான பகையை மறந்துவிட்டாயோ? அச்சமயம் உனது தந்தை அவர்களிருவருக்கும் ஏதோ இணக்கம் செய்துவைத்தும், அப்பகை இராதாகிருஷ்ணன் மனதில் இன்னும் மூண்டுகொண்டேயிருக்கிறது. ஆகையால் நீ யவன் கோபத்தைக் காத்தல் வேண்டும். நில்! நில்! ஏதோ ஒரு ஒலிகேட்டதே அது என்ன? காற்றும் அடிக்கவில்லை; இலைகளுமசையவில்லை; எனினும் எனக்கொரு ஒலி கேட்டதே. அதோ கேள்! மறுபடியும் கேட்கிறது! போர்முரசின் ஒலி போன் றிருக்கின்றதே." என்று நாற்றிசையும் நோக்கினார்.

இவ்வாறு ஆலாலசுந்தரர் ஐயமுறுங்கால், நீண்டு பரந்த ஏரியின்மீது, சேய்மைக்கண் கரும்புள்ளிகள் நான்கு தென்பட்டன. விரைவில் அவை, போர்வீரர்களைக் கொண்டு தீவுநோக்கி விரைந்துவரும் நான்கு படகுகளாய்ப் பரிணமித்தன. பதுக்கைகள் பலவற்றைப் புறம்பே போக்கி, விரைந்து முன்வந்த தோணிகளில் தோன்றிய இராதாகிருஷ்ணனது, பாதபம் தீட்டிய பதாகைகளும், வீரருக்குரிய ஈட்டியும், வாளும்

பரிதியின் கிரணம்பெற்று அம்பரத்து அவிரொளி பரப்பாநிற்க, வாங்கிய நுசுப்பினராய்ப் பலர் துடுப்பின் துணைகொடு நீரை யெறிந்து நாவாய் செலுத்துதலும் வயவர்கள்தாம் விதம்பெறத் தரித்துள தலைப்பாகைகள் காலி னசைதர, துடுப்பொழி திவலைகள் விசும்பிடை முகிலெனச் செறிந்த. சேணின் கறங்கிய வள்விசி முரசின் தெள்ளொலி, இடைநின்ற வளாகத்தின் பயனால் கடுமைநீங்கி இன்னிசை பயந்து நீரில் நிலைத்துத் தருக்களில்தங்கிப் புறம்போந்து கேட்பவர் செவிகளுக்குக் களிப்பைத் தந்தது. பல்லியங்கள், போர்க்கெழு மோசையையும் வெற்றியை விளக்கு மோதையையும், போரின் மடிந்த வீரர்க் கிரங்கு விம்மலையும் மாறிமாறி இசைத்தன. சிறிது நேரத்தில், வாச்சியங்களின் தமரமடங்க, இராதாகிருஷ்ணன் விறலை வியந்தும், அவனது சுற்றத்தின் வீரத்தைப் புகழ்ந்தும், அம் மலைநாட்டுக் குடிகளை வாழ்த்தியும் சில பாடல்கள் பாடப்பட்டன. அவ்வமயம் படகிலுள்ளா ரனைவரும் ஒருமித்துப் பாடிய பல்லவியின் பேரொலி ஏரிமுழுவதும் பரவியது.

தனது மகன் வருவதைக்கண்ட மாலினி மகிழ்ச்சி பொங்கத் தோகையர் பலரைத் திரட்டி, இலஞ்சியின் கரையை நோக்கி நடக்கலுற்றாள். கோதைய ரோதியில் வளதை புக்கு, நாற்புறமும் ஐம்பாலலைப்ப, மதர்ப்புறு வதனத்துடன் வனிதையரும், கைவீசிப் பல்லவியைக் கரையினின் றிசைத்தனர். எழுமையும் மகனது ஏமாப்பையே நாடிய மாலினியும், அவனுக் குவப்பை யூட்டவெண்ணித் தாயின் தகவொடு, அவனதுமனந் தொடர்ந்துகொண்ட வல்லியையும் வழிமறித்து மகனை யெதிர்கொள்ளத் தன்னோடு சேரவினள். சுதஞ்சனைக் கிப்பணி சிறிதும் ஏற்கவில்லையேனும், மாலினி முகங்கோணுவண்ண மங்ஙனஞ் செய்ய வொருப்பட்டு மெல்லென நடந்தாள். அனை வரும் பாதையைத் தொடர்ந்து செல்லுங்கால், சுதஞ்சனை காதுகளுக்குச் சங்கொலி யொன்று கேட்டது. கேட்கவு மவள் பாதையின் றெல்லையி னொதுங்கி ஆலாலசுந்தரரை விளித்து, "ஏரியி னக்கரையிலிருந் தெழு மவ் வொலியைக் கேட்டீரோ? அது எனது தந்தையின் சங்கொலி; அவரை யிவ்விட மழைத்து வரும் தோணி நமதா யிருக்கட்டும்" என்று புகன்று, அருக்கன் கதிரென அணங்கும் ஒளிபெறத் தாவிப் புணையொன்றிலேறிச் சிக்கென மறைந்தாள். இராதாகிருஷ்ணன் கரைசேர்ந்து தனது தாயின் ஆயத்தில் தேடினபோது அவன் கண்களுக்கு அவள் புலனாகவில்லை.

வானின்றிழிந்து மண்மேற் பிறக்கும்போது நாம் வெறுங்கையராய்ப் பிறவாமல் கைக்கொடு வந்தது, வளமிகிய மல்லவேனும், அந்நிதியினு முயர்ந்த பொருளாய நல்லறிவாம். கருவுற்ற நாள் கடவுளின் கருணை பெற்று, நிறைந்த ஞானமுள்ள மானிடப் பிறவிகளனைவரும் இளமையி லிறைவனுட னிணங்கி வாழ்ந்து, வயதேற வேற அவ்வொளியினின்றும் விலகிச் செல்கின்றனர். விரைவில் அவரது ஆக்கத்தின் பெருமிதத்தை அறவே மறந்து நிலவுலகத்தின் சிறையி லடைபட்டு வளர, நிலமாதாய செவிலித்தாயும், தாய்க்குரிய அன்பினோடு மானிடர்க்குற்ற தளைகளை யிறுகப்பூட்டி, அவர் கண்டறிந்த ஆனந்தத்தினளவை மறக்கச் செய்கிறாள். சிறுவர்க்குரிய ஆடல்களில் அவர் செய்வதென்னே! திருமணமென்றும், வீயுமுயிர் மீளாவழி செலுத்தும் ஈமக் கடனென்றும் மூத்தோர்க்குரிய செய்கைகளையே சிறுவர் பின்பற்றுகின்றாரன்றோ! அந்தோ குழந்தாய், இவைகளையெங்குக் கற்றாய்? முன்னறிவிற் சிதறுண் டொட்டிய சிற்றறிவின் பயனன்றோ உன் செய்கை? உனது ஆனந்த நிலையை விடுத்து இந் நிலவுலகி லுழலுமிப் பேதைமை என்னே!

நமது முன்னை நிலையை நாம் அறவே மறந்துவிடுவதில்லை. எங்கிருந்து வந்தோம், எங்குச் செல்கின்றோம், என்னும் வினாக்கள் நமதுள்ளம்விட் டகல்வதுண்டோ? அந்நிலையின் தன்மையை அறியாவிடினும், களிகொண்டு மகிழுமமயம் இழந்தபே றின்னதென ஒருவா றுணர்கின்றோம். தவறிழைக்குங்கால் அகம்வெம்பி நைந்து பேதுறுவ துள்ளக்கரியென்னும் ஒளியாலன்றோ? அதுவே நாம் கந்தழி யிடம் பெற்ற பொற்கிழியாம்.

இன்னோரன்ன பெருந்திருவைப் பெற்றனன்போல் ஸ்ரீபாலனும் தனது பெண்ணைக் கண்டு மகிழ்ந்தனனேனும் அறிவொழுக்கங்களிற் சிறந்த அரிவையை நெடுநாள் பிரிந்த ஆகுலத்தினாலும், தாயன்பு துறந்த அவளது நிலையை நினைந்ததனாலும், அவள் உள்ளன்போடு அவனுக்குச் செய்த பணிவிடையைக் கண்டதனாலும் கலுழ்ந்தன வவன் கண்கள். அச்சமயம் ஸ்ரீபாலன் மெய்யுணர்வு நீங்கப் பெற்று, வானளாவிய எண்ணங்கள் குடிபுக்க மனதினனாய் ஒரு சிறிது அசைவற்று நின்றான். கன்னிகையு மவனிடம் காட்டிய அன்பிற் களவிலது. தன் தந்தையின்மீதே நாட்டம் வைத்த இந்நங்கை அவனருகில் நின்ற அண்ணலொருவனை யறிந்திலள். அவனும் அச்சங்கொண்டு அருகுறாஅய் விலகி நின்றான். உண்மைக் காதலின் தன்மை யென்னே யென்னே! ஸ்ரீபாலன் மால்வண்ணனைக் குறிப்பிட்டபின்னரே அவனைக் கண்ணிற் கண்டு முகமன் கூறினாள்.

இதனிடையில் ஆலாலன் அக்கரையி லிழியும் இராதாகிருஷ்ணனை உற்றுநோக்கிய வாங்கே, இறுமாந்த அவனது நடையையும் தன் தலைவனது தாழ்மையையுங் கண்டு பெருமூச்செறிந்து, தன்னை யறியாது புறம்போந்த புன்கண் ணாலியைக் கைகொடு பூசினான். இவனது செய்கையைக்கண்ட ஸ்ரீபாலனும், மால்வண்ணனை நோக்கி "எனது வந்திகன் கண்கள் கலங்கிய காரணத்தைக் கண்டு கொண்டாயோ" வென வினவ, அதை யறியாத இளைஞனுந் திகைக்கவே முதியோனும் செல்லத் தொடங்கினான்.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

சில அரும்பதங்களின் பொருள்:—உயிர்ப்பு வீங்கி - பெருமூச்சுவிட்டு. செய்மைக்கண்-தூரத்தில். பரிணமித்து-உருவம் மாறி. பதுக்கை - சிறுதிட்டை. பாதபம் - மரம், இங்குப் பனைமரம். பதாகை - துகிற்கொடி. அம்பரம் - ஆகாயம். வாங்கிய - வளைந்த. நுசுப்பு-இடுப்பு. நாவாய் - படகு. வயவர் - வீரர். சேண் - தூரம். கறங்கிய - ஒலித்த. வள்விசி-வாரால்கட்டிய. வளாகம் - சூழ்ந்திருக்கு மிடம். பல்இயம்-பல வாத்தியங்கள். தமரம் - சப்தம். விறல் - ஆற்றல். ஓதி - கூந்தல். வளதை - காற்று. ஐம்பால் - கூந்தல். ஏமாப்பு - மகிழ்ச்சி. ஆயம் - கூட்டம். வீயும் - சாகும். உள்ளக்கரி - மனச்சாக்ஷி. கந்தழி - எவ்விதப் பற்றும் எவ்வித உருவமும் இலதாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள். ஆகுலம் - துக்கம். கலுழ்ந்தன - நீர் வடித்தன. இழியும் - இறங்கும். ஆலி - நீர்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி,
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 8, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

முஸ்லீம் சகோதரர்களுக்கு இஷாஅத்துல் இஸ்லாம் சங்கம் ஓர் வேண்டுகோள்.

எமது அன்பார்ந்த முஸ்லீம் சகோதரர்காள்!

ஆண்டவன் அருளிய வேதமாகிய திருகுர்ஆன் 3. 103-ல் சொல்லியிருப்பதாவது:—(மனிதர்களுக்கு) "தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும், (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும், உங்களில் ஒரு வர்க்கத்தார் இருப்பது அவசியத்திலுமவசியம். இவர்கள்தாம் ஜயமுடையவர்களாவார்கள்."

இவ் வாக்கியத்தை நடைமுறையில் அனுஷ்டிக்க வேண்டியது முஸ்லீம்களாகிய நமது முக்கிய கடமையாய் இருக்க, இதில்தான் நாம் சிந்தனையின்றியும் சிரத்தையின்றியும் இருந்துவருகிறோம் என்பது வெளிப்படை. இக்காலத்தில் இதர மதஸ்தர்கள் இதைச் செய்கையில் கையாண்டு தங்கள்தங்கள் மதத்தை விருத்திசெய்கின்றனர்.

ஆண்டவனருளால் தற்போது மதுரை ஜில்லாப் பெரியகுளம் தாலூகாவைச் சார்ந்த சிலைபம்பட்டி, நாரணத்தேவன் பட்டி, கோகிலாபுரம் முதலிய இடங்களில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் நமது இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டிருப்பதைப் பத்திரிகைகள் மூலமாகவும், பிரஸ்தாப மூலமாகவும் தெரிந்து இருப்பீர்கள். ஆதரவின்றி நம்மிடம்வந்து சேர்ந்த அவர்களை அன்போடு ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைப் புரிவதற்காகவும், பொதுவாகச் சென்னை மாகாணத்திலேயே இஸ்லாம் மதத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனும், உத்தமபாளையம் கம்பம் முஸ்லீம் மகாஜனங்களால் இஷாஅத்துல் இஸ்லாம் சங்கம் என்று ஒரு சங்கம் 21—12—29ல் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் ஆபீஸைக் கம்பத்தில் ஏற்படுத்தியிருப்பதையும், அதற்கு ஒழுங்கான நிர்வாகக் கமிட்டி வகையறு நியமித்து இருப்பதையும் கண்டும் கேட்டும் பத்திரிகைகளின் மூலமாய்த் தெரிந்துமிருப்பீர்கள். அடிக்கடி நம் இஸ்லாம் மார்க்கத்தில் இதர மதஸ்தினர்கள் சேர்ந்து வருகிறார்கள். அவ்வாறு சேரும் அவர்களுக்கு முதல்முதல் புதிய உடை முதலியன கொடுத்து இஸ்லா மதத்தில் சேர்த்துவருகிறோம். இதுவுமன்றிச் சிலையம்பட்டி நாரணத்தேவன்பட்டி, கோகிலாபுரம் இவைகளில், தற்சமயம், பள்ளிவாசல் நிருமிக்க வேண்டி அதற்கான இடங்களும், கட்டிட வேலைகளும், கிணறும், மய்யத்தான்கரை வகையறு சகல உதவிகளும் செய்து கொண்டு வருகிறோம். இஸ்லாமிய விஷயங்களைப் போதிக்கவும், தொழவைக்கவும், கல்வி புகட்டவும், பேஷ்இமாம்கள் ஏற்படுத்திச் சம்பளம் வகையறு இந்தச் சங்கத்திலிருந்து கொடுத்து வருகிறோம். இஸ்லாத்திற்சேருவதற்கு இன்னும் அநேக கிராமங்கள் தயாராயிருப்பதாகவும், நம் சங்கத்துக்கு அடிக்கடி தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

முக்கிய மார்க்கக் கடமையானதும் நம் பெருமானார் நாயகம் சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களும் சகாபாக்களும் தங்கள் வாழ்நாள் பூராவும், அர்ப்பணம் செய்ததுமான இவ்வரிய பெரிய வேலையை இச்சங்கம் செய்துகொண்டு இருப்பதால், ஒவ்வொரு முஸ்லீம் சகோதரர்களும் இச் சங்கத்திற்கு அங்கத்தினர்களாகச் சேர்ந்து சந்தாக்கள், நன்கொடை முதலானவைகளும் கொடுத்து உதவி செய்ய வேண்டியது தங்கள் தங்கள் முக்கிய கடமையாய் இருக்கிறது.

எத்தனையோ வகையான இப்புனித காரியத்திற்கு ஏராளமான பொருள்கள் வேண்டும் என்பதை நாம் சொல்லாமலேயே ஒவ்வொருவரும் நன்குணர்ந்திருப்பீர்கள். ஒரு மாதத்தில் பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இஸ்லாத்தில் சேர விருப்பங்கொண்டு பல ஊர்களிலிருந்து அழைப்புக் கிடைத்தும் சங்கத்தில் பொருள் இல்லாததால் அவ்விடங்கள் போகத் தடைப்பட்டிருப்பதை இச்சங்கம் தெரியப்படுத்திக் கொள்கிறது.

அன்புடைய மூமின்காள்! இச் சங்கை பொருந்திய ரம்ஸான் மாதத்தில் செலவு செய்யும் சக்காத்துப்பணத்தை நம் முஸ்லீம்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, இச்சங்கத்திற்கு அனுப்பிக் கொடுத்தால் சக்காத்துப் பணத்தைச் செலவு செய்யும், ஷரீஅத்து முறையைக் கவனித்தும் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கும், சக்காத்துத்தொகைகளுக்கும், வெவ்வேறாகக் கணக்கு வைக்கப்படும்.

இங்ஙனம்,

செ. முகமது மீரா ராவுத்தர், உத்தமபாளையம்.
பிரஸிடெண்டு.

பொ. நாகூர் மீரா ராவுத்தர், கம்பம். காரியதரிசி.

ஹாஜி இ. அல்லாபிச்சை ராவுத்தர், கம்பம்.
பொக்கிஷதார்.

பாரதி

தேசிய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள் தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்கள் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது.

உள்நாடு சந்தா ரூபா 2 0 0
வெளிநாடு ,, ,, 2 8 0
தனிப்பிரதி விலை அணா 0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"ப்ரேமவல்லி"

அல்லது

பயங்கர ரகசியம்

By
Mrs. D. N. Sundaram.

இது ஓர் சிறந்த துப்பறியும் நாவல்.

துப்பறியும் விஷயத்தில் மிகவும் சிறந்ததாகித் துப்பறிபவள் மிக்க புத்தி சாதுர்யத்துடன் பல வேலைகள் செய்துவருவது, மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. இது படிக்கப்படிக்க மிக்க இன்பத்தைத் தரும். இன்னும் என்னவருமோ எப்படியாகுமோவென்று படிப்போரின் மனத்தைக் கவரும் தன்மையுடையது. விலை ரூபா 0 14 0

இப்புத்தகம் கிடைக்கும் இடம்.
Mrs. D. N. SUNADARAM.
16. வடகூர் செல்வவினயகர்கோவில் தெரு,
மைலாப்பூர், சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்ரும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிர மணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பாசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்–S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II „ **As. 4.**
23. Book III „ **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)